# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 9. | ஏப்ரல் 1986. | அன்பளிப்பு ரூ. 2.

# விமானத் தாக்குதலை முறியடிப்போம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகளது உக்கிரமான எதிர்தாக்குதல்கள் காரணமாக வடக்கில் சிங்கள தரைப்படைகளின் நடமாட்டமும் வெறியாட்டமும் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. தரைப் படைகளுக்கு பலத்த உயிர்சேதம் ஏற்பட்டுவருவதைக் கண்டு பீதியடைந்த சிங்கள அரசு, ஆகாய மார்க்கமாகவும் பீரங்கிகள் மூலமாகவும் குண்டுகளைப் பொழிந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது பழிதீர்த்து வருகிறது. விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாது திண்டாடும் சிங்கள கூலிப் பட்டாளம் தமிழீழ மக்களுக்கு தொடர்ச்சியாக இன்னல்களை விளைவித்து, அவர்களைப் பயமுறுத்திப் பணியவைக்கும் நாசகார நோக்கத்தோடு இந்தக் கோழைத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது. விமானத் தாக்குதல்கள் மூலம் தீவிரப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்தின் இந்தப் புதிய சவாலை எதிர்கொண்டு முறியடிக்க எமது விடுதலை இயக்கம் சகலவிதமான ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஜனவரியிலிருந்து இன்றுவரை தமிழீழம் போர்முனைகளில் எமது வீரர்கள் வியக்கத்தக்க வீர சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள். சிங்கள தரைப்படைகளின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டு எதிரிக்கு பெரும் உயிர் சேதம் விளைவிக்கப் பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 400 இராணுவத்தினர்வரை இம் மூன்று மாத இடைவெளிக்குள் கொல்லப்பட்டுள்ளனர். பெரும் தொகையான ராணுவ கவச வாகனங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. ஏழு ஹெலிகாப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. கடற்படை பீரங்கிப் படகு ஒன்று கடற் கண்ணிவெடி மூலம் அழிக்கப்பட்டது. இவ்வாறாக எமது வீரர்கள் சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பை முறித்து வருகிறார்கள்.

தரையுத்தத்தில் மூக்குடைபட்டு முகாம்களுக்குள் முடங்கிக் கொண்ட இராணுவம் தனது பீரங்கிகளை அப்பாவிப் பொது மக்கள்மீது திருப்பி வருகிறது. ஆகாயப் படையையும் உதவிக்கு அழைத்து விமானக் குண்டுவீச்சையும் நிகழ்த்துகிறது. தனது இயலாத்தனத்திற்கு ஈடுகொடுக்க அப்பாவிப் பொதுமக்களைத் தண்டிக்கும் மிகவும் கீழ்த்தரமான யுக்திகளை சிங்கள இராணுவம் கையாண்டு வருகிறது.

இந்த வக்கற்ற சிங்கள அரசு தனது இயலாத்தனத்தின் இறுதி கட்டமாக விமானக் குண்டுவீச்சில் இறங்கலாமென நாம் ஏற்கெனவே கணித்துக்கொண்டோம். விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் செயல்முறைகளை விளக்கும் நூல் ஒன்றை மக்கள் மத்தியில் எமது இயக்கத்தின் இராணுவப் பிரிவு வெளியிட்டது. குண்டுவீச்சு ஆரம்பமாவதற்கு முன்னராகவே நாம் தீர்க்கதரிசனத்துடன் 'சிவில் பாதுகாப்பு' வழிமுறைகளை மக்களுக்கு எடுத்து விளக்கினோம்.

இந்த விமானத் தாக்குதலின் பிரதான நோக்கம் மக்களைக் கிலிகொள்ளச்செய்து அவர்களது ஆன்ம உறுதியை உடைப்பது இரண்டாவது, வெகுசனத்தை விடுதலைப் போராளிகளுக்கு எதிராகத் திருப்புவது. இந்த இரண்டு நோக்கிலும் சிங்கள அரசு படுதோல்வி கண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து மன வைராக்கியம் கொண்ட எமது மக்கள் குண்டு வீச்சில் மனம் தளர்ந்து போகவில்லை. அதே வேளை போராளிகளையும் பகைத்துக் கொள்ளவில்லை. மாறாக, இந்த விமானத் தாக்குதல்களுக்கு எதிராக மக்கள் அணிதிரண்டு எழுந்து அரசுக்கு எதிராக ஆர்ப்பரித்துவருகிறார்கள்.

இந்த விமானத் தாக்குதலை எதிர்கொண்டு முறியடிக்க எமது இயக்கம் தயாராகிவருகிறது. உறுதி கொண்ட மக்கள் விடுதலைப் போராட்டத்தை எந்தவித ஆயுதங்களினாலும் உடைத்துவிடமுடியாதென்பது சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தப்போகும் காலம் வெகுதூரத்திலில்லை.



1986 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தமிழீழத்தின் பல முனைகளில் விடுதலைப் புலி வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்திற்கும் மத்தியில் நடைபெற்ற பல மோதல்களில் எமது வீரர்கள் வியப்புக்குரிய சாதனைகளைப் புரிந்து சிங்கள ஆயுதப் படைகளுக்கு பலத்த உயிர்ச் சேதத்தை இழைத்தனர்.

மோதல்களில் அரசு தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| இறந்த அரச ஆயுதப் படையினர் | : 418 |
| சுட்டுவீழ்த்தப்பட்ட, சேதமாக்கப்பட்ட ஹெலிகொப்டர்கள் | : 7 |
| சேதமாக்கப்பட்ட ஆகாயவிமானம் | : 1 |
| சுக்கு நூறுக்கப்பட்ட ரோந்துப்படகு | : 1 |
| தகர்க்கப்பட்ட இராணுவ வாகனங்கள் | 16 |

விரிவான செய்திகள்— 6ம் பக்கம்

மக்களோடு புலிகள்



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஈழத்தமிழர் பிரச்சனையும் இந்தியாவின் நிலைப்பாடும்

1983 ஜூலை இனப் பூகம்பத்தை அடுத்து ஈழத் தமிழர் பிரச்சனையில் இந்தியா தலையிட்டவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. தனது 'பிரஜைகள்' என்று சொல்லிக்கொள்ளும் ஒரு மக்கள் சமூகத்தை, சிங்கள அரசானது, இனரீதியாக அந்நியப்படுத்தி, அவர்களைப் பூண்டோடு அழிக்கும் ஒரு இனக்கொலைத் திட்டத்தை அமலாக்கி வரும்போது அயலிலுள்ள ஒரு வல்லரசு வெறும் பார்வையாளராக இருக்க முடியவில்லை. அதோடு, ஈழத் தமிழருடன் இரத்தத்தால் பிணைந்த ஐந்து கோடி மக்கள் தென்னகத்தில் எழுப்பிய கிளர்ச்சியும் மத்திய அரசுக்கு ஒரு நெருக்குதலைக் கொடுத்தது. இவை மாத்திரமின்றி, இதுவரை காலமும் ஒரு உள்நாட்டு இனச் சிக்கலாக இருந்துவந்த இப்பிரச்சனை இந்தியாவின் தேசிய நலனையும் பாதுகாப்பையும் அச்சுறுத்தும் அளவிற்கு விஸ்பரூபம் கொண்டதால் இந்தியா கைகட்டி சும்மா இருக்க முடியவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளான அந்நிய நாசகார சக்திகளின் ஊடுருவலும் இந்திய உபகண்டத்தின் ஸ்திர நிலைக்கும் சமாதானத்திற்கும் சவால்விடுவதாக அமைந்தது. இறுதியாக ஈழத் தமிழ் அகதிகள் இலட்சக்கிற்கும் அதிகமானோர் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துகொண்டதும் இந்திய அரசுக்கு ஒரு பொருளாதாரப் பளுவை சுமத்தியது. இந்த நிர்ப்பந்தங்கள் காரணமாக ஈழத் தமிழர் பிரச்சனைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண இந்திய அரசு விழைந்தது.

இந்திய ராஜதந்திர தலையீடு இரு கட்டங்களாக அமைந்தது. திருமதி இந்திராகாந்தி - பார்த்தசாரதி முதற் கட்டத்திலும் ராஜீவ் - பண்டாரி இரண்டாவது கட்டத்திலுமாக இந்தசமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முதற் கட்டம் கொழும்பு சர்வகட்சி மாநாடு ஆகவும் இரண்டாவது கட்டம் திம்பு பேச்சாகவும் அமைந்தது. இரண்டரை வருடங்களுக்கு மேலாக இழுபட்ட இந்த இரு கட்டப் பேச்சுக்களும் ஜெயவர்த்தனாவின் குந்துக்கரணங்கள் காரணமாக தோல்வியில் முடிவடைந்தன. அரசியல் ஏமாற்றுவித்தையில் ஜெயவர்த்தனா ஒரு சூத்திரதாரி என்பதை முதலில் திருமதி இந்திராகாந்தி அம்மையார் உணர்ந்து கொண்டார். ராஜீவ் அரசுக்கும் காலம் கடந்துபோகாது இந்த ஞானோதயம் பிறந்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம்.

ஜெயவர்த்தனா ஒரு இரட்டை வேடதாரி. ஜனநாயக சோசலிசம் என்ற போர்வையில் ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியை நடத்துபவர். புத்தரை வழிபட்டு ஹிட்லராக இயங்குபவர். அகிம்சையைப் போதித்து ஆயுத அடக்குமுறையைக் கையாளுபவர். அரசியற் தீர்வை விரும்புவதாகச் சொல்லி இராணுவப் பாதையைக் கடைப்பிடிப்பவர். இந்தியாவின் நண்பனாக நடித்து இந்தியாவின் பரமவிரோதிகளோடு குலாவுபவர். ஜெயவர்த்தனாவின் இந்த முரண்பட்ட முகமூடிகள் இந்திய ராஜதந்திர சாணக்கியத்திற்கே ஒரு சவாலாக அமைந்தது. ஜெயவர்த்தனாவின் கூப்பிய கரங்களுக்குள் பௌத்த தர்மத்திற்குப் பதில் பாசிச இனவாதம் ஒளிந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள இந்தியாவிற்கு காலதாமதம் ஏற்பட்டமை தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியாவையும் உலகையும் ஏமாற்ற யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டு ஜெயவர்த்தனா தனது நாசகாரத் திட்டத்தை செயல்படுத்திவந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் சிங்கள இராணுவ இயந்திரம் பெரிய அளவில் பலப்படுத்தப்பட்டது. சிங்கள இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு புதிய இராணுவ முகாம்கள் தமிழ்ப் பகுதி அடங்கிலும் நிறுவப்பட்டன. யுத்த விமானங்கள், போர்க்கப்பல்கள், பீரங்கிகள் கவச வாகனங்கள் போன்ற நவீனரக ஆயுதங்கள் பெருமளவில் குவிக்கப்பட்டன. இந்த சமாதான யுகத்தில்' ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கில் தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டன. லட்சக்கணக்கான தமிழர்கள் தமது தாய்ப்பூமியிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாயினர். கிழக்கு மாகாணம் சிதைக்கப்பட்டது. வடக்கு, விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகியது. சிங்கள இனவாத அரக்கன் தமிழீழத்தை எரித்தலன்னம் பயங்கரமான ஒரு இனப் படுகொலையை புரிந்து வருகிறான் என்பதை இந்தியா இறுதியில் உணர்ந்துகொண்டது.

ஈழத் தமிழரை ஒழித்துக்கட்டும் இலங்கை அரசின் இனப் படுகொலைத் திட்டத்திற்கு அந்நிய நாசகார சக்திகள் முழு மூச்சாக உதவிவருவதும் இந்திய அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. இஸ்ரேலிய உளவு ஸ்தாபனங்களும் பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ். கூலிப்படைகளும் சிங்கள இராணுவத்திற்கு யுத்த தந்திரங்களில் பயிற்சி அளித்துவருவது ஒருபுறமிருக்க, பாகிஸ்தானும் சீனாவும் இலங்கையோடு இராணுவ உறவுகளைப் பலப்படுத்தி வருவது இந்திய தென் பிராந்திய பாதுகாப்பிற்கு புதிய ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, பாகிஸ்தான் இலங்கைக்கு பாரிய அளவு ஆயுத தளபாட உதவிகளை வழங்கிவருவதுடன் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியையும் அளித்துவருகிறது. இவ்வாறு இந்தியாவுக்கு விரோதமான அந்நிய சக்திகள் இலங்கையில் களம் அமைத்து தமிழருக்கு எதிரான யுத்தத்தில் தீவிர பங்கு கொண்டு வருகின்றன. இந்தியாவின் விரோதிகளோடு கைகோர்த்து நின்று இனக் கொலையை தீவிரமாக்கிவரும் ஜெயவர்த்தனாவின் இந்த சூத்திரதார நாடகம் இந்திய சமாதான முயற்சியை ஒரு கேலிக்கூத்தாக்கியது. இதனால் ஏமாற்றமும் சினமும் அடைந்த இந்திய அரசு இலங்கையுடன் கண்டிப்பான போக்கை கடைப்பிடிக்க தீர்மானித்தது. இதன் விளைவாகவே இந்திய பாராளுமன்றத்திலும், ஐ. நா. மனித உரிமை சபையிலும் இந்தியா இலங்கைமீது இனக் கொலை குற்றத்தைச் சுமத்தியது.

சர்வதேச நிறுவனமொன்றில் முதன் முதலாக இந்திய அரசு ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பியதை நாம் வரவேற்கவே செய்கிறோம். ஆனால் இந்த சர்வதேச ராஜதந்திர அழுத்தங்களுக்கு எல்லாம் ஜெயவர்த்தனா இலகுவில் மசிந்துவிடப்போவதில்லை. இலங்கை அரசு அறிவித்திருக்கும் யுத்த நிபந்தனைகளையும், காலக்கெடுவையும் ஜெயவர்த்தனாவின் போர் முழக்கங்களையும் பார்க்கும் போது இது புலனாகிறது. அதுமாத்திரமன்றி, கிழக்கு மாகாணத்தை கபளீகரம் செய்யும் வகையில் ஒரு 'தீர்வுத் திட்டத்தை' அமல்படுத்தப்போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது. வடக்கு மாகாணத்தை யுத்த களமாக வைத்துக்கொண்டு கிழக்கில் மாகாண சபை அமைப்பு ஒன்றை திணிக்கும் இத்திட்டம் தமிழரின் பாரம்பரிய பூமியை கூறுபோடும் நாசகார நோக்கைக் கொண்டது. ஒருதலைப்பட்சமான இத்திட்டம் தமிழரின் ஏகோபித்த அரசியல் அபிலாசைகளை நிராகரிப்பதுடன் இந்தியாவின் மத்தியஸ்துவத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கும் அந்தரங்க நோக்கத்தைக் கொண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஈழத் தமிழருக்கு பாதகமானதும், தமிழீழத்தை துண்டாடுவதுமான இத்திட்டத்தை இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்பதே எமது கோரிக்கை.

இந்திய அரசானது இலங்கைமீது ராஜதந்திர அழுத்தங்களை மட்டும் பிரயோகிப்பதுடன் நின்றுவிடாமல், ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சனையில் தீர்க்கமான, தெளிவான சில நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்து. இதற்கு முதற்படியாக, ஈழத் தமிழரின் பாரம்பரிய பூமியை, அத்தாய்ப் பூமி மீதான தமிழ் மக்களின் இறைமையை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும்.

---

அண்மையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ''இந்தியா டுடே'' என்ற சஞ்சிகைக்கு அளித்திருந்த பேட்டியொன்றில் ''வட பகுதிக்கான உணவு விநியோகத்தை நிறுத்துவதன் மூலம், அங்கு பட்டினிச் சாவை ஏற்படுத்தி அதன் மூலம் வடபகுதிப் பயங்கரவாதிகளை அடக்கமுடியும்'' என்று கூறியிருந்தார். ஆனால் இவ்வாறு செய்வதை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ள மாட்டா என்ற காரணத்தாலேயே இந் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டதாகவும் கூறியிருந்தார். ஆனால் இப்பொழுது இந்நடவடிக்கையை தொடருவதற்காக சில மறைமுக சூழ்ச்சிகளை சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது. இச்சூழ்ச்சிகளின் விளைவே பரந்தனிலும், ஓமந்தையிலும் நடைபெற்ற புகையிரதங்கள் மீதான தாக்குதல்களாகும். இந்நடவடிக்கைகள் மூலம் வடபகுதிக்கான போக்குவரத்தையும், உணவு விநியோகத்தையும் அரசு மேற்கொள்வதை போராளிகள் தடுக்கின்றனர் என்றும், எனவே வடபகுதியில் ஏற்படும் உணவு, எரிபொருள் நெருக்கடிகளுக்கு போராளிகளே காரணம் என்றும் சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்ய முற்படுவதுடன், வடபகுதிக்கான விநியோகங்களை நிறுத்திவிடவும் அரசு முயல்கின்றது. உண்மையில் போராளிகளுக்கும் புகைவண்டிச் சம்பவங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

15. 3. 86 சனிக்கிழமை பரந்தனில் நிகழ்ந்த மேற்படி குண்டுவெடிப்புச் சம்பவத்தை கண்ணுற்ற இரு பொதுமக்களின் தகவல்கள் :—

பரந்தன் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் வசிக்கும் ஒரு குடும்பஸ்தர் கூறினர் :—

- சம்பவதினத்தன்று காலையிலேயே எமது பிரதேசம் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டது.
- இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டு எமது வீடுகளில இருந்து எங்களை விரட்டி அடித்தனர்.
- எமது பிரதேசத்தினூடான போக்குவரத்துக்கள் எல்லாவற்றையும் இராணுவத்தினர் தடைசெய்தனர்.
- இராணுவத்தினர் என்ன செய்யப் போகிறார்களோ என்ற பீதியுடன் நான் எனது மனைவி, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் சென்று ஒளித்து கொண்டேன்.
- நண்பகல் 12மணியளவில் பெரும் சத்தத்துடன் ஓர் குண்டு வெடித்தது.

தாக்கப்பட்ட புகைவண்டியில் பிரயாணம் செய்த இன்னொரு பயணி - கூறினர் :—

- அன்று சனிக்கிழமையாதலால் வடக்குக்கு செல்கின்ற தமிழ்ப்பிரயாணிகளின் அளவு புகையிரதத்தில் மிகவும் அதிகமாக இருந்தது.
- அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் சிங்களவர்களான புகையிரதத்தின் சாரதி, காப்பாளர்கள் ஆகியோர் இறக்கப்பட்டு தமிழ் ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- குண்டு வெடித்த இடத்தின் அருகாமையிலுள்ள வீடுகளில் பொதுமக்கள் எவரும் காணப்படவில்லை. எல்லாமே வெறிச்சோடிக் கிடந்தது.
- நாங்கள் 1½மைல் தூரம் கால்நடையாக வந்து உடையார் கட்டுக்குளத்துக்கு சொந்தமான லாரிகளின் உதவியைப் பெற்று இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு யாழ் வைத்தியசாலைக்கு வந்தோம்.
- வைத்திய சாலைக்கு வருகின்ற பாதையிலுள்ள ஆனையிறவு முகாமில் எமது அவல நிலையைப் பார்த்தும், இராணுவத்தினர் எம்மை மேற்கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. சிறியவர், பெண்கள், முதியவர், அனைவரையும் இறக்கி அவர்களின் அடையாள அட்டையை பரிசோதித்து இம்சைப்படுத்திய பின்னரே செல்ல அனுமதித்தனர்.

தமிழினத்துக்காகப் போராடும், தமிழ்ப் போராளிகள் தமிழ்மக்களுக்கு எதிராக இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களா? இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு புகையிரதத்தில் வந்த பிரயாணிகளும், அப்பிரதேசத்திலுள்ள மக்களும் சாட்சி. இதே போன்ற ஒரு நடவடிக்கையே 25.3.86. அன்று ஓமந்தையில் இடம் பெற்ற புகையிரத எரிப்பு சம்பவமுமாகும். இச்சம்பவத்தின் போது, இராணுவத்தினர் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாத வகையில் வந்து புகைவண்டிப் பயணிகளைத் தாக்கித் துரத்தியடித்தபின்னர், புகைவண்டியின் 12 பெட்டிகளை பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியதுடன் புகையிரதத்தின் எஞ்சின் பகுதியை வெடிமருந்து வைத்தும் தகர்த்துள்ளனர்.

---

''இன்டர்நேஷனல் அலேட்'' என்ற பெயரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்துலக மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இலங்கைத்தமிழர் நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் ''தமிழர் தன்னாட்சிப் பகுப்பு'' செய்யாதவரை அனைத்துலக அரங்கத்திலிருந்து இலங்கைக்கு நிதியுதவி, ஒத்தாசை செய்யும் நாடுகள் தமது உதவியை நிறுத்தி வைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளது.

''இன்டர்நேஷனல் அலேட்'' ஸ்தாபனத்தின் இம்முடிவு இதன் தலைவரான ஜூடித் காட் அம்மையாரால் இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அம்மையார் இலங்கையைப்பற்றி நிறைய தெரிந்தவர், நன்கு மதிக்கப்படுபவர். இலங்கைப் பிரச்சனை தொடர்பாக இலங்கை அதிபர், இந்தியப்பிரதமர், தமிழ்ப்போராளிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொண்டவர். முன்னர் இவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளிநாட்டு அபிவிருத்தி உதவித்துறை அமைச்சராக இருந்தபோது இலங்கையின் பிரமாண்டமான திட்டமான விக்டோரியா அணைக்கட்டுத் திட்டத்துக்கு 100 மில்லியன் பவுண்கள் பிரிட்டிஷ் உதவி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ''இன்டர்நேஷனல் அலேட்டின்'' இந்நடவடிக்கையால், ஜே.ஆர். வியப்படைந்துள்ளதுடன் கவலையும் கொண்டுள்ளார். மேலும் இவ்வாண்டு இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டுதவி மொத்தம் 480 மில்லியன் டொலர்களாகும்.

கனடா, நோர்வே போன்ற இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகள் இலங்கைக்கான தமது உதவி பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிரிட்டனும் இதுபற்றி இப்போது மறு ஆய்வு செய்துகொண்டிருப்பதாகவும் ஜூடித்காட் அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஒலிபரப்பு
கூட்டுஸ்தாபனம்.

---

இலங்கையின் பெயரை பாதுகாப்பதற்காக இலண்டனிலுள்ள ''சாச்சி அன் சாச்சி'' எனும் நிறுவனத்தின் துணையுடன் பிரச்சாரம் செய்வதற்கு இலங்கையரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனத்திற்கு முன் பணமாக 3 இலட்சம் ஸ்டேலிங் பவுணை இலங்கையரசு கொடுத்துள்ளது. வெளிநாடுகளில் தமிழ்ப் போராளிகள் செய்யும் பிரச்சாரத்திற்கு எதிர்ப் பிரச்சாரம் செய்வதற்காக மேற்படி நிறுவனத்திடம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து முற்பணம் வழங்கியுள்ளது இலங்கையரசு.

---

எமது மக்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்களுக்கு பாரிய சேதம் இழைக்கப்பட்டது. எமது மக்களுக்கெதிரான படுகொலைத் திட்டத்தின் வெளிப்பாடுகள் இவையென நான் உணர்ந்தேன். ஒரு மக்கள் இனத்தை முற்றாக அழிப்பதற்கு முனைந்து நிற்கும் சர்வாதிகார பாசிச அரசிலிருந்து எமது மக்களை விடுதலை பெறச் செய்து பாதுகாக்க ஆயுதப் போராட்டமே ஓரே வழி என நான் நம்பினேன்.

புரட்சிகர சோஷலிசமே எனது அரசியல் சித்தாந்தம். மனிதனை மனிதன் சுரண்டாத, வர்க்க பேதமற்ற சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதையே நான் சோஷலிசம் என்று கருதுகிறேன். சுதந்திரமான, பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்த அச்சமுதாயத்தில் மனித உரிமைகளும், சுதந்திரங்களும் பாதுகாக்கப்படும். சமுதாய முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கப்படும்.

என் உணர்வுகளை வெகுவாகத் தூண்டிய கெரில்லாத் தலைவர் சேகுவேரா.

தமிழ் மக்களுடைய போராட்டத்தை சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் என வகைப்படுத்தலாம். இது அரசியல் விடுதலைக்கான, தனது அரசியல் தலைவிதியை தானே தீர்மானிப்பதற்கான போராட்டம்.

இந்திய மக்கள் உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்து வருகிறார்கள். நீதிக்கும், மனித நேயத்துக்கும் தொடர்ந்து குரல் கொடுப்பது, இந்திய மக்களின் பாரம்பரியச் சிறப்பாக இருந்து வருகிறது. பாலஸ்தீன, நமீபிய மற்றும் தென்னாபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கிறார்கள். அண்மையில் பொலிஸாரியோ விடுதலை இயக்கத்தையும் அங்கீகரித்தார்கள். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இந்திய மக்கள் அங்கீகரிப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

— தலைவர் பிரபாகரன்
'ஜென்டில் மேன்' பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியிலிருந்து சிலவரிகள்

---

அம்பாறையில் இடம் பெற்ற படுகொலை, வன்முறை சம்பந்தமாக இலங்கை அரசு, நியமித்த மூன்று உறுப்பினர்கள்கொண்ட இராணுவ விசாரணைக்கமிட்டியை மட்டக்களப்பு குடிமக்கள் கமிட்டி நிராகரித்துவிட்டது. — ஆகாசவாணி.













# அம்பாறையில் அரசபயங்கரம்

1986ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள்.
முற்பகல் பதினொருமணி.
அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயிலை அண்டியுள்ள தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் ஆகிய தமிழ் விவசாயக்கிராமங்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. பரந்த வயல்வெளிகளில் ஏழை விவசாயக் குடிமக்கள் உற்சாகத்துடன் தமது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.
தம் இரத்தத்தை வியர்வையாக்கி, இவ்வளவு நாட்களாக தாம் மேற்கொண்ட கடின உழைப்புக்கு கிடைத்த பலனை விட்டு அவர்களின் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி. அறுவடை செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்க் குவியல்களைப் பிரித்து அவற்றில் இருந்து நெல்மணிகளை வேறாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.
அமைதி தவழும் அந்த சூழலில் ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட ஏழைவிவசாயிகள் சற்று நேரத்தில் அங்கு நிகழப்போகும் அனர்த்தங்களைப்பற்றி எதுமறியாது தம் கருமத்தில் மூழ்கியிருந்தனர்.

இதே நேரம் —
அம்பாறை இராணுவமுகாம் —
இனத்துவேஷமும், இரத்தவெறியும் கொண்ட அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி மத்திழூபெரேராவின் கண்களில் இரத்தவெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது.
அவன் திடீர் உத்தரவொன்றைப் பிறப்பிக்கிறான்.
உத்தரவைப் பெற்றுக்கொண்ட இன்னொரு இனவெறி மிக்க கொடியவனான ரம்பொடையைச் சேர்ந்த, 35 வயதான லெப்டினன்ட் சந்திரபாலா உடனடி நடவடிக்கையில் இறங்குகிறான். சந்திரபாலா தலைமையில் 85 பயங்கரவாதிகளைக் கொண்ட குழு ஒன்று முற்றிலும் ஆயுதபாணிகளாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கவசவண்டிகளில் தாவிஏறுகிறது. கவசவண்டிகள் இயக்கப்படுகின்றன.
ஒன்றன்பின் ஒன்றாக ஆறு கவசவண்டிகளும் புழுதியைக் கிளப்பியபடி தங்கவேலாயுதபுரம் நோக்கி விரைகின்றன.

தங்கவேலாயுதபுரத்தின் வயல்கள்.
கவசவண்டிகள் நிறுத்தப்படுகின்றன.
கைகளில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் பச்சைச்சட்டை பயங்கரவாதிகள் கவச வண்டிகளிலிருந்து குதிக்கின்றனர்.
அப்பாவித் தமிழ் விவசாயிகள் அரச பயங்கரவாதிகளால் சுற்றிவளைக்கப்படுகிறார்கள்.
இதனை சற்றும் எதிர்பாராத விவசாயிகள் பரபரப்படைகிறார்கள் அவர்கள் மனதில் பெரும்பீதி, பயம்.

அவர்களை அறியாமலே கைகள் மேலே உயருகின்றன. சிலைபோல அசையாது, அப்படியே உறைந்துபோய்விடுகிறார்கள்.
முன்னே சென்றுகொண்டிருந்த இராணுவ பயங்கரவாதிகள் அம்மக்களை பின்தொடருமாறு கட்டளை பிறப்பித்துக் கொண்டே அருகேயுள்ள காட்டுப் பிரதேசத்தை நோக்கி நடக்கின்றனர்.
நெஞ்சிற்குள் ஏதோ ஒன்று உறுத்த, இரத்தம் உறைந்த நிலையில் என்ன நடக்குமோ என்ற பீதியுடன் அந்த மக்கள் அவர்களைப் பின்தொடர்கின்றனர்.
ஏனைய இராணுவத்தினர் அப்பாவி மக்கள்மீது தமது துப்பாக்கிகளை குறிபார்த்தவாறு பின்தொடர்கின்றனர்.

அடர்ந்த காட்டினுள் கொண்டு செல்லப்பட்ட அப்பாவி மக்கள் வரிசையாக நிறுத்தப்படுகின்றனர்.
இச்சந்தர்ப்பத்தில்...
காமவெறிபிடித்த இராணுவத்தினரால் பல பெண்கள் இழுத்துச் செல்லப்படுகிறார்கள்.
விபரீதம் நிகழப்போவதை அந்த உள்ளங்கள் உணர்ந்து கொள்கின்றன.
இயந்திரத் துப்பாக்கிகள் மக்களைக் குறிபார்த்து சுடும்நிலைக்கு கொண்டுவரப்படுகின்றன.
அம்மக்களை மரணபீதி ஆட்கொள்கிறது.
அவர்கள் ஓட முயற்சிக்கின்றனர்... ஆனால் கால்கள் மறுக்கின்றன.
அரச கைக்கூலிகளின் விரல்கள் இயந்திரத் துப்பாக்கிகளின் விசைகளை அழுத்துகின்றன.
அந்தக் கணமே இயந்திரத்துப்பாக்கிகள் சடசடக்கின்றன.
அந்தோ! எமது மக்கள் — தமிழீழ மண்ணின் மைந்தர்கள் — பிணமாகின்றனர். தமிழனாக பிறந்துவிட்ட ஒரே ஒரு காரணத்திற்காக அந்த அப்பாவி ஏழை விவசாயிகள் கொன்று குவிக்கப்படுகின்றனர். எங்கும் மரண ஓலம் அந்த ஓலத்தினால் காடே அதிர்கிறது.
ஆண்கள், பெண்கள், வயோதிகர், சிறுவர் என்ற எந்த வேறுபாடுமின்றி அனைவரும் இனவெறி கொண்டவர்களின் இரத்தப்பசிக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றனர்.

உடல்கள் சல்லடையாக்கப்படுகின்றன.
முகங்கள் சிதைக்கப்படுகின்றன; தசைகள் அறுபடுகின்றன.
இரத்த ஆறு பெருக்கெடுக்கிறது.
ஒன்றல்ல; இரண்டல்ல; 103 உயிர்கள் பலியாகின்றன.
பிணக்குவியல்களுக்கிடையே எக்காளமிட்டுச் சிரிக்கிறது அரச கூலிப்படை.
இழுத்துச் செல்லப்பட்ட இளம்தமிழ்ப்பெண்கள் ... மிருகத்தனமான முறையில் கற்பழிக்கப்படுகின்றனர். மாறி மாறிக் கற்பழித்து
தமது காமப்பசியை தீர்த்துக்கொண்ட காமுகர்களால் அப்பெண்கள் கோரமான முறையில் கொன்று குவிக்கப்படுகின்றனர்.
அரச பயங்கரவாதிகள் மீண்டும் வயலினுள் நுழைகின்றனர். அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்க் குவியல்கள் இறந்தவர்களின் சடலங்கள் மீது பரப்பப்படுகிறது. அவற்றின் மேலே பெற்றோல் ஊற்றப்பட்டு தீ மூட்டப்படுகிறது. அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்க்குவியல்களும் உழவு யந்திரங்களும் தீக்கிரையாகின்றன.
தங்கவேலாயுதபுரம் எரிகிறது.

சிறிது நேரத்திற்கு முன்னர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த அந்தக் தமிழ்க்கிராமம் பிணக்காடாக மாறிவிட்டது.
எங்கும் கருகிய, அரைகுறையாக எரிந்த உடல்கள்.
மிகப்பெரிய நரவேட்டையை வெற்றிகரமாக முடித்துவிட்ட மகிழ்ச்சியில் அரசகூலிப்படை அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறது.
மறுநாள் இலங்கை வானொலி 'லங்காபுவத்தை' மேற்கோள் காட்டிக் கூறியது.

''அம்பாறையில் 40 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதுடன், அவர்களது முகாம் ஒன்றும் அழிக்கப்பட்டது.''

---

**யா**ழ் கோட்டை இராணுவ முகாமிலுள்ள ''சிங்க படைப்பிரிவைச்'' சேர்ந்தவர்களுக்கும் ஏனைய இராணுவத்தினருக்கும் இடையே 6.2.86 அன்று கலகம் வெடித்தது. இக்கலகத்தை கட்டுப்படுத்தி, ஒழுங்கை நிலைநாட்ட முயன்ற இராணுவ மேஜர் ஒருவரும் கோப்ரல் ஒருவரும் சிங்கள படைப்பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

---

**ப**லாலி முகாமில் உள்ள இராணுவத்தினருக்கும், விமானப்படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு இராணுவ கோப்ரல் விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

---

**இ**லங்கையின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வர்த்தகத்துறை, மீன்பிடித்துறை, பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை எல்லாமே வீழ்ச்சியடைந்துவிட்டது. இலங்கையின் இனப்பிரச்னை முடிவுக்கு வராவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் மீள முடியாதளவுக்கு தள்ளப்பட்டுவிடும் என்றும் வெளிநாடுகளின் கடனிலேயே தங்கி இருக்க வேண்டிவரும் என்றும் நிதிமந்திரி ரொனிடி மெல் எச்சரித்துள்ளார். இதே வேளை இலங்கைக்கான, ஒரு நாளைக்கான இராணுவ செலவு ஒன்றரைக்கோடி ரூபாவையும் தாண்டிவிட்டது.

— டெக்கான் ஹெரால்ட் . 8.3.86

---

**பா**கிஸ்தானுக்கும், ஸ்ரீலங்காவுக்கும் இடையே வளர்ந்து வரும் இராணுவ உறவைப்பற்றி இந்திய அரசு அச்சம் தெரிவித்துள்ளது. தீவின் இனப்பிரச்சினையில் இஸ்லாமாபாத்தின் தலையீடு அதிகரித்து வருவது பற்றிய உறுதியான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கூறியவை இந்திய வெளிவிவகார அமைச்சின் வருடாந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறன. வேற்று நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு, உளவு நிறுவனங்களின், விசேஷமாக பிரித்தானிய நிபுணர்கள், இஸ்ரேல் ஸ்தாபனங்கள் போன்றவற்றின் செயல்பாடுகள் பற்றியும் (இந்திய) அரசாங்கம் ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது. இவ்வாறும் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

**இ**லங்கையில் திட்டமிட்ட இனப்படுகொலை தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசால் நடத்தப்படுகின்றது என்பதை இந்தியா பாராளுமன்றத்தில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுவதை கண்டித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் இதில் இனப்படுகொலையின் அம்சங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டதுடன், இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் சமீபத்திய செயல் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

---

**இ**லங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் அணுகுமுறையில் இந்தியா 'நடுநிலைமை தவறியிருப்பதாக' இன்று (1-3-86) இலங்கை அரசு தனது அறிக்கை ஒன்றில் கடுமையாகக் குற்றம் சாட்டியது. 'தமிழ்ப் பயங்கரவாதிகளின் பயிற்சி, செயல்பாட்டுத் தளமாக' இருக்கும் தமிழ் நாட்டின் 'பிராந்திய அரசியல் சக்திகளுடன்' இணங்கிச் சென்றதன் மூலம் இந்தியா தனது நம்பகத் தன்மைக்கு பாதகம் ஏற்படுத்திக் கொண்டதாகவும் அது கூறியது.

இந்தியாவும் மனித உரிமைகளை மீறியிருக்கிறது. இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் இலங்கையைக் குற்றம் சாட்டும் தகுதி இந்தியாவிற்கில்லை என்றும் மறைமுகமாக கூறியது.

'மருத்துவரே, உம்மை முதலில் குணப்படுத்திக் கொள்ளும்' என்று அந்த அறிக்கை மேலும் கூறியது.

ஹிந்து - 2.3.86

---

**ஐ**.நா.சபை மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில், தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகள் குறித்து ஸ்ரீலங்கா அரசு கடுமையான கண்டனத்துள்ளாகியது.

ஜெனிவாவில் கூடிய ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்தியாவும், வேறு பல நாடுகளும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை கைக் கொள்ள வேண்டாமென்றும், அதற்குப் பதிலாக அரசியல் தீர்வை நாடும்படியும் கொழும்பைக் கேட்டுள்ளன. ஸ்ரீலங்கா அரச ஆயுதப் படைகளின் தமிழருக்கெதிரான நடவடிக்கைகளும் அங்கு கண்டனத்துக்குள்ளாயின.

இந்தியன் எக்ஸ்பிரஸ் 10.3.86

---

- **இ**லங்கையின் வடக்குப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகம் ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.
- **இ**லங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்களிடையே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு செல்வாக்கும், ஆதரவும் நிறைய இருக்கின்றது.
- தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக அடக்க இலங்கை இராணுவத்தால் முடியாது.
- இலங்கை இராணுவம் தனது மிருகத்தனமான நடவடிக்கைகளால், மக்களை துன்புறுத்தி வருகிறது.
- இலங்கையில் பாகிஸ்தான் மறைமுகமாகச் செயல்படுகின்றது
- இலங்கைப்பிரச்சனையை அதிகப்படுத்தும் வகையில் அமெரிக்காவும், இஸ்ரேலும் செயல்பட்டு வருகின்றது.

— இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் தியு குணசேகரா.

---

**இ**லங்கை பாராளுமன்றத்தில், அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய அத்தனகலை எம்.பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி ''ஈழம் வாதிகள் தங்களிற்கென தனியாக வருமானவரி திணைக்களம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். அதன் மூலம் சுமார் 2 கோடி ரூபாவை வசூலிக்க தீர்மானித்துள்ளார்கள். இந்நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இயங்கி வருகின்றன. நாட்டின் நீதியமைப்பு என்ன செய்கின்றது?'' எனக் கேட்டுள்ளார்.

---

**அ**ண்மையில் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் வடபகுதியில் பெரும்தொகையில் இராணுவத்தினர் பல முகாம்களில் இருக்கிறபோதிலும் அங்கு விடுதலைப்புலிகள் ஆட்சியே நடைபெறுவதாகக் கூறியுள்ளார். இராணுவத்தினர் ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமிற்கு செல்லமுடியாத நிலையில் முகாமிற்குள் முடங்கிக்கிடக்க வேண்டியுள்ளதாகவும் பொதுவாக பொலிசையும், இராணுவத்தையும் விடுதலைப்புலிகள் அடக்கி வைத்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

---

**கோ**ட்டை, ஜெயவர்த்தனபுரத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இலங்கையின் 38வது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த அதே வேளை, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்கள் அந்த நாளை துக்க தினமாக அனுஷ்டித்தனர்.
யாழ்ப்பாணச் சுவர்களில் ''காணவில்லை'' என்ற தலைப்பில் வேடிக்கையான சுவரொட்டிகள் காணப்பட்டன. 38 வயதுடைய ''சுதந்திரம்'' என்ற நபரைக் காணவில்லை என்று அச்சுவரொட்டிகளின் வாசகம் கூறியது.

---

**இ**லங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்ட வரலாற்றில், முதல் முறையாக யாழ்ப்பாணக் கச்சேரி [அரச செயலகம்]க் கொடிக்கம்பத்தில், இந்த சுதந்திர தினத்தன்று தேசியக் கொடி பறக்க விடப்படவில்லை. இந்நிகழ்ச்சி பல விடயங்களுக்கு, குறிப்பாக இப்போது வட பகுதியில் [அரச நிர்வாகம்] குழப்ப நிலையில் உள்ளது என்பதற்கு ஒரு குறியீடாகும்.

சாட்டர்டே ரெவ்யூ 16.3.86

---

**மா**ர்ச் மாதம் 11ம் திகதி யாழ்ப்பாணம் பொதுவைத்தியசாலையில் இடம்பெற்ற அசம்பாவிதம் மற்றும் துப்பாக்கிச் சண்டைகளால் காயமடைந்த அப்பாவிப் பொதுமக்களதும், வைத்தியசாலை ஊழியர்களின் உயிர்களைக் காப்பதில் விடுதலைப் புலிகள் தீவிரமாக செயல்பட்டனர். 12 விடுதலைப்புலிகள் காயமடைந்தவர்களுக்கு தலா $1^1/_2$ பைந்து விதம் இரத்ததானம் செய்தனர்.

---

**க**டந்த 3 வருடங்களாக பாதுகாப்புப் படைகளுக்கும், போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இராணுவ ரீதியான மோதல்களின் ஒழுங்கமைவு சண்டையில் போராளிகள் கை ஓங்குகிறது என்பதையே நிரூபிக்கின்றது. போராளிகள், முதன்மையாக தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளூர் மக்களின் ஆதரவுடன் ஆயுதப் படைகளை பாசறைகளுக்குள் தள்ளி அடக்கிவிட்டனர்.

சண்டே 30.3.86.


---

## விடுதலைப்புலிகள்

விடுதலைப் புலிகளுக்கு அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் பத்திரிகைக்கு சந்தா கட்ட விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை மூலமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பலாம். ஆண்டு சந்தா ரூ. 25. Post Box 928, அடையார் சென்னை 20.











## 2.4.86

கிளிநொச்சி மாவட்டத்தில், கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடையில் உள்ள காட்டுப்பகுதியில், வாகனத் தொடரில் வந்த ராணுவத்தினர் மீது எமது கெரில்லாப் பிரிவொன்று பதுங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு இராணுவ வாகனம் கண்ணி வெடியில் சிக்கி முற்றுகச் சேதமடைந்தது. ஏராளமான AK 47 துப்பாக்கிகள் இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்டன. எமது தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினர் தமது பாசறைகளுக்குப் பின்வாங்கினர். எமது போராளிகளில் நால்வர் வீரமரணமடைந்தனர்.

## 5.4.86

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரடியனறு எனுமிடத்தில் 8 வாகனங்களில் வந்த இராணுவத்தினருடன் விடுதலைப்புலிகள் கடுமையாக மோதினர்கள். ராக்கட்களை பாவித்து விடுதலைப்புலிகள் தாக்கியதில் ஒரு இராணுவ கவசவாகனமும், ஒரு இராணுவ லொறியும் முற்றுக சேதமடைந்தது இதிலிருந்த 9 இராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இச்சண்டையானது 3 மணித்தியாலத்திற்கு மேலாக நடைபெற்றது.

# மக்களுக்கு மதிப்பளியுங்கள்



'(கெரில்லாப் போராட்டமானது ஒரு மக்கள் யுத்தம் இந்தப் போராட்டத்தை நடத்துவது மக்கள் இராணுவம். இந்த மக்கள் இராணுவம் மக்களுக்கு மாறுபட்ட ஒரு சக்தியாக இயங்காமல் மக்களோடு ஐக்கியமானதாக அமையப் பெற்றிருக்க வேண்டும்.' என்பது சீனப் புரட்சித்தலைவர் மாவோவின் கருத்து.

ஒழுக்கமும் கட்டுப்பாடும் புரட்சிகர மக்கள் இராணுவத்திற்கு உயிர்நாடியானது என வலியுறுத்தும் மாவோ மக்களின் நல்லாதரவைப் பெறும் விடுதலை இராணுவத்தை எந்தவொரு சக்தியாலும் வென்றுவிட முடியாது என்கிறுர். "எமது போராளிகள் எங்கு சென்றாலும் அவர்கள் மக்களோடு நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்கள்மீது அன்பும் அக்கறையும் கொள்ள வேண்டும். மக்களது பிரச்னைகளை அறிந்து அவற்றை தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும்'' என மாவோ வலியுறுத்தி வந்தார்.

1928ம் ஆண்டு மா.சே.துங் சீன மக்கள் விடுதலை இராணுவத்திற்கு விடுத்த எட்டு அம்ச ஒழுக்க விதிகள் வருமாறு :

1. மக்களோடு மரியாதையாகப் பேச வேண்டும்.
2. மக்களிடம் வாங்கும் பொருட்களுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும்.
3. மக்களிடம் இரவலாக வாங்கும் பொருட்களை திருப்பிக் கொடுத்து விடவேண்டும்.
4. சேதமாகும் பொருட்களுக்கு நஷ்டஈடு செலுத்தவேண்டும்.
5. மக்களை ஏசித் திட்டக்கூடாது, அடித்துத் துன்புறுத்தக் கூடாது.
6. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடாது.
7. பெண்களோடு தவறுக நடக்கக் கூடாது.
8. கைதிகளை துன்புறுத்தக் கூடாது.

மாவோவின் வழிநடத்தலின்கீழ் சீன விடுதலை இராணுவம் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் சிகரமாக அமைந்தது. மக்களின் நன்மதிப்பையும் நல்லாதரவையும் பெற்றது. மக்கள் இராணுவம் என்ற பெயருக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது.

இன்று தமிழீழத்தில் மார்க்சிய சித்தாந்தத்தை தழுவிக்கொண்டதாக பறைசாற்றும் விடுதலை அமைப்புகள் சில 'மக்கள் விடுதலை இராணுவம்' என்றல் என்ன என்பதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஒழுக்கமும் கட்டுப்பாடும் மக்கள் நேயமும் ஒரு விடுதலை இராணுவத்திற்கு மூலமானது என்பதை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மாவோ போன்ற மார்க்சியப் புரட்சித் தலைவர்களிடமிருந்து இவர்கள் நிறையப் படிக்க வேண்டியிருக்கிறது.

பருத்தித்துறை-காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மிகப்பெரிய பாலமான தொண்டமானற்றுப் பாலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது. இராணுவரீதியில் முக்கியத்துவம் பெற்ற இப்பாலம் தொண்டமானறு இராணுவ முகாமுடன் 1.1/2மைல் தூரத்திலுள்ள வல்வெட்டித்துறை இராணுவ முகாமையும், 7 மைல் தொலைவில் உள்ள பருத்தித்துறை இராணுவ முகாமையும் நேரடியாக இணைப்பதற்கு பயன்பட்டதுடன், அப்பாவிப் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் ஒன்றிணைந்து காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற்கொள்ள ஏதுவாக இருந்தது. 1985ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் நடைபெற்ற படுகொலைகளின்போது-இப்பாலத்தின் வழியாகவே தொண்டமானறு இராணுவ முகாமிலிருந்து-இராணுவத்தினர் வந்தனர் தொண்டமானறு பிரதான முகாமில் இருந்து 300யார் தூரத்தில் அமைந்துள்ள, 100யார் நீளம் கொண்ட இப்பாலம் இராணுவத்தினரால் இரவு பகல் 24மணி நேரமும் பலத்த காவலுக்குட்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இப்பாலத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கத்துடன், பாலத்தின்மீதும், பாலத்தின் இருமருங்கிலுமாக மொத்தம் 3 காவல் அரண்களும் அமைக்கப்பட்டிருந்தன. இக்காவல் அரண்களில் இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு காவலரணினுள்ளும் 10க்கு மேற்பட்ட ஆயுதமேந்திய இராணுவ வீரர்கள் காவலிருந்தனர். இவ்வளவு சிங்கள இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஒன்பது தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் வெற்றிகரமான முறையில் வெடிமருந்து மூலம் இப்பாலத்தின் 1/4 பங்குப் பகுதியை முற்றுகத் தகர்த்தனர். இதன் மூலம் இப்பகுதியினூடாக ராணுவப் போக்குவரத்து தடைபட்டிருக்கிறது.



ஸ்ரீலங்கா கப்பற்படையின் "மொடல் 118" என்ற பீரங்கி பொருத்தப்பட்ட ரோந்துப் படகொன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவான கடற்புலிகளால் தகர்த்தெறியப்பட்டது. 3-3-86 அன்று இத்தாக்குதல் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் நைனுதீவு கப்பல்துறைக் கண்மையில் கடலுள் விதைக்கப்பட்டிருந்த கடற்கண்ணி வெடியை தூரக் கட்டுப்பாட்டுக் கருவியினுல் வெடிக்க வைத்ததன் மூலம் படகு வெடித்துச் சுக்கு நூறுகியது. அதிலிருந்த ஒரு லெப்டினன்ட் உட்பட 14 கடற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஸ்ரீலங்கா கடற்படையின் ரோந்துப்படகொன்று சிதறடிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இத்தாக்குதலின் பின்னர் சிங்களக் கடற்படை தீவுப் பகுதிகளில் அராஜகத்தில் ஈடுபட்டபோது அதுவும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

1984ம் ஆண்டு, மேற்கே மன்னாரிலிருந்து கிழக்கே முல்லைத்தீவு வரையான கடற்பகுதி முழுவதும் "கண்காணிப்பு வலயமாக" ஸ்ரீலங்கா அரசால் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன், இப்பகுதிகளில் 100 யார் வரையிலான கடற்கரைப் பிரதேசங்களும் தடைசெய்யப்பட்ட வலயங்களாக்கப்பட்டன. இவ்வருடம் பெப்ரவரி 14ம் திகதி வடமுனையான பருத்தித்துறையிலிருந்து கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் கோமாரி எனும் கிராமம் வரையான கடற்பகுதியை 'பாதுகாப்பு வலயமாக" ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது மேலும் வடபகுதிக் கடல் முழுவதும் மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் மார்ச் 2ல் பிரகடனப்படுத்தியது.

தமிழீழக் கரையோரங்களில் வாழும் மீனவர்களின் பிழைப்பில் இவ்வலயங்கள் மண்ணை வாரிப் போட்டன. மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்ந்துவந்த தமிழ் குடும்பங்கள் தொழிலுக்குச் செல்ல முடியாமையினுல் பட்டினிச் சாவை எதிர் நோக்குகின்றன. பொருளாதார ரீதியாக தமிழ் மக்களை அழிக்கும் இனப் படுகொலையில் ஸ்ரீலங்கா அரசு இவ்வாறு ஈடுபட்டு வருகிறது.

தமிழீழக் கடற்பகுதி முழுவதையும் "பாதுகாப்பு வலயங்களாக" மாற்றிய ஸ்ரீலங்கா அரசு 60க்கு அதிகமான ரோந்துப் படகுகளையும், சிறுகப்பல்களையும் பயன்படுத்தி மேற்குப் பகுதியில் தமிழக மீன ர்களைக் கொன்றும், துன்புறுத்தியும், ட களைக் கொள்ளையடித்தும் அட்டகாசம் செய்து வருகிறது.

தமிழீழக் கடற்பகுதிகளில் கடற் படையினரின் அட்டகாசத்தையும், அடாவடித்தனத்தையும் முறியடித்து, சிங்கள அரசின் இனப்படுகொலைத் திட்டத்தை தொறுக்கு முகமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை கடலுக்கும் விஸ்தரித்து உள்ளனர்.





# விடுதலை இராணுவமும் கட்டுப்பாடும்

சமோரா மாஷேல்



**ஆபிரிக்க கண்டம் தோற்றுவித்த புரட்சித் தலைவர்களில் சமோரா மாஷேல் முக்கியமானவர். அவர் மொசாம்பிக் நாட்டினது தேசிய விடுதலையின் சிற்பி. போர்த்துக்கேய காலனிய ஆட்சிக்கு எதிராக போர்தொடுத்து ஆயுதப் போராட்டத்தால் அந்த அடக்குமுறையை உடைத்தெறிந்தவர். சாதாரண கெரில்லாப் போராளியாக சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்ட அவர் காலப்போக்கில் தேசிய விடுதலை இராணுவத்தின் பிரதம தளபதியாகி 1975ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இன்றுவரை மொசாம்பிக்கின் ஜனாதிபதியாக பதவிவகித்து வருகிறார்.**

**சமோரா மாஷேல் ஒரு விடுதலைவீரர் மட்டுமன்றி ஒரு சோசலிசப் புரட்சிவாதியும் ஆவார். அவரது புரட்சிகர சிந்தனைகள் மொசாம்பிக் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உந்துசக்தியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தன. மக்கள் சக்தியின் மகத்தான வல்லமைபற்றி அவரது எழுத்துக்கள் வலியுறுத்துகின்றன. ஒரு இலட்சியத்தைப் பற்றிக்கொண்டு அணிதிரளும் மக்கள் ஒரு மாபெரும் சக்தியாக உருக்கொண்டு உலகத்தை மாற்றியமைக்கிறார்கள்; இந்த மகத்தான மக்கள் சக்திதான் வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது; புதிய உலகைப் படைக்கிறது என்பது மாஷேலின் தத்துவம். ''எமது புரட்சிகரப் போராட்ட அனுபவமும் அதனால் நாம் ஈட்டிய வெற்றியும் ஒரு உண்மையைப் பகர்கிறது. அதாவது விதி என்றோ, தலையெழுத்து என்றோ எதுவுமில்லை. மக்களே சமுதாயத்தை மாற்றியமைக்கிறார்கள். புதிய வாழ்வைப் பிறப்பிக்கிறார்கள்'' என்கிறார் மாஷேல்**

**ஒழுக்கமும் கட்டுப்பாடும் மக்களோடு ஒன்றிய உறவும் ஒரு புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவத்தின் அடிப்படை அம்சங்கள் என வலியுறுத்தும் மாஷேல், கட்டுப்பாடுதான் ஒரு விடுதலை இராணுவத்தின் போராட்ட வலிமையாக விளங்குகிறது என்கிறார். மக்கள் இராணுவத்தின் குணாம்சங்கள் பற்றியும் கட்டுப்பாடு பற்றியும் மாஷேல் கூறியுள்ள கருத்துக்களை அவரது எழுத்திலிருந்து சுருக்கமாக மொழி பெயர்த்துத் தருகிறோம்.**

மொசாம்பிக் நாட்டில் இன்று போர்த்துக்கேய காலனிய மேலாதிக்கத்திற்கு எதிராக ஒரு யுத்தம் நடைபெறுகிறது. இது புரட்சிகர ஆயுதப் போராட்டம். இதில் நாம் கையாளும் உபாயங்களும் போர்முறைத் திட்டங்களும் போர்த்துக்கேய இராணுவத்தினின்று வேறுபட்டவை. புரட்சியை நோக்காகக் கொண்ட எமது படையணிகளின் அமைப்பும் அரசியல் இலட்சியங்களும் போர்உபாயங்களும் அவர்களிலிருந்து வேறுபட்டவை.

மொசாம்பிக் நாட்டுக்கு வெளியிலே, கண்டம் தழுவிய அடிப்படையில் அல்லது சர்வதேச அடிப்படையில் ஒரு ராணுவத்தை உருவாக்கி அதன் உதவிமூலம் மொஸாம்பிக்கை போர்த்துக்கல்லிடமிருந்து விடுவிக்கலாம் என்று சிந்தித்தவர்கள் இருக்கின்றனர். புரட்சிக்குத் தகுந்த வேளை வந்ததும் அனுபவத் தேர்ச்சி பெற்ற ஆத்மார்த்தப் புரட்சியாளர்கள் சிலர், அங்கங்கே போரை ஆரம்பித்தால் அதுவே மக்களை ஒட்டுமொத்தமாகப் போரில் குதிக்கத்தூண்டும் என்று இன்னொரு பகுதியினர் கூறினர். இவ்விரு கருத்துக்களில் யதார்த்தமாகச் செயல்படுத்த முடியாத அம்சங்கள் உள்ளன என்பது ஒரு புறமிருக்க, இவை தவறான அடிப்படைகளைக் கொண்டவை என்பதும் கவனத்துக்குரியது.

முதல் கருத்தின் அடிப்படையில், மக்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள இயலாதவர்கள் என்ற தொனி உள்ளது. அதனாலேயே நாட்டுக்கு வெளியிலிருந்து ஒரு படை வந்து அவர்களை விடுவிக்கலாம் என்ற யோசனை பிறந்திருக்கின்றது. இதற்கும் அடியில், தேசிய விடுதலைப் போர் என்பது யுத்தமுனையினது உபாயங்களிலேயே தங்கியுள்ளது என்பதும், தேசத்தின் யதார்த்தங்களுக்கு அந்நியமான ராணுவ அதிகாரிகளினால் விடுதலை இயக்கத்துக்குத் தலைமைதாங்க முடியும் என்பதும் ஊடாடுகின்றன. அனுபவத் தேர்ச்சி பெற்ற புரட்சியாளர்களினால், தன் போக்கான ஒரு புரட்சி இயக்கத்தை துவக்கி விடலாம் எனக்கூறப்பட்ட கருத்தின் அடியில், இயந்திர ரீதியிலேயே புரட்சி செயல்படுகிறது என்ற கருத்தை உணரலாம். இது மக்களது மனோபாவங்களைப்பற்றிய தவறான கோட்பாடுகளின் விளைவாகும்.

## மக்கள் விடுதலைப்போர்

இவற்றினின்றும் வேறுபட்டதுதான் மக்களது விடுதலைப் போர். இது மக்களே நடத்தி அவர்களே வெற்றியைப் பெறும் போராகும். விரோதியைக் கண்காணிப்பதிலிருந்து, உபகரணங்களைக் கடத்துவதுவரை பல்வேறு வேலைகளில் ஈடுபடும் மக்களின் பெருந்தொகை, ஆயுதப் பற்றுக் குறையை நிவர்த்திசெய்கிற அம்சமாக போராட்டத்துக்கு உதவுகிறது. ஆனால் இந்த அளவுக்கு மக்களைச் செயல்பட வைப்பதனால், முன்னணியில் உள்ளவர்கள் மக்களுக்கு அரசியல் விழிப்பை ஏற்படுத்தும் காரியத்தை இடைவிடாமல் செய்யவேண்டும். போரின் தேவையையும், முறையையும் மக்கள் கிரகிக்கும்வகையில், இது செய்யப்படுவதுடன் இது சம்பந்தமாக எழக்கூடிய எத்தனையோ பிரமாண்டமான தடைகளை மீறி, இயக்கத்தின் பலவீனங்களைத் தீர்த்து பலத்தை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வளவையும் சாதிப்பது மக்களின் போருக்கு அத்யாவசிய அடிப்படை ஆகும்.

இவ்விடத்தில் சீக்கிரமே கலபமாக வெற்றி கிடைத்துவிடும் என்று மக்களை ஏய்ப்பதும் வெற்றி தோல்விகளைப்பற்றிய பொய்வதந்திகளைப் பரப்புவதும் இயக்கத்துக்குக் கேடானது. அத்துடன் மக்களினது அரசியல் ஞான வளர்ச்சியையும் இது முடமாக்கிவிடும். பொது வாழ்வின் அனுபவக்கிரகிப்பை இது தடுக்கும். மொத்தத்தில் எங்களது அரசியல் சிந்தனை, உபாயமுறை யாவுமே இதனால் பாதிக்கப்படும்.

மக்கள் திரட்சியற்று, பிளவுண்டு, தங்கள் நிலைபற்றியோ, சக்திபற்றியோ தெளிவு ஏதுமற்று உள்ளவரை விரோதி அவர்களை ஆட்கொள்வான். இவை களையப்பட்டு அவர்கள் சுயப்பிரக்ஞையும் திரட்சியும் பெற்றுவிட்டால், அவர்களே விரோதியை அழிக்கத்தக்க சக்தி ஆகிவிடுவர்.

மொஸாம்பிக் பெருமளவுக்கு கிராமியப் பகுதிகளினாலேயே ஆன தேசம் ஆதலால், விடுதலை இயக்கம் இந்தப் பகுதிகளிலேயே நடக்கிறது. அதிகாரவர்க்கத்தின் படைக்குவிப்பும் பலமும் நகர்ப்புறங்களைச் சார்ந்தவை. கிராமப்புறங்களுக்கு விரோதியின் அணியை நாங்கள் போராட இழுக்கும்போது, நாங்கள் ஒரு முதலையின் உபாயத்தைக் கையாள்கிறோம். இரையாகப் பிடிபட்ட மிருகம் கரையிலேயே பலசாலியாக இருக்கும். முதலையின் பலம் நீரில்தான். எனவே அது இரைக்குப் பலம் இல்லாத நீரினுள் அதை இழுக்கிறது.

விரோதியிடம் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் இருப்பதால் வேகமாக தாக்கவும் நகரவும் அவனால் முடியும். போராளிகள், நேரில்வந்து போராட முடியாத கோழைகள் என்று அவன் பிரச்சாரம் செய்வதுண்டு. ஆனால் விரோதித் தளபதிகளின் உபாயங்களினுள் நாங்கள் ஏன் சிக்க வேண்டும்? எங்கள் நோக்கம் ஒரு பிரமாண்ட வெற்றிக் காட்சியை நடத்திக் காட்டுவதல்ல விரோதியின் ஆதிக்கத்தை அப்புறப்படுத்துவது மட்டுமே எங்கள் நோக்கம். விரோதியின் சிறு நிலையங்களை நாம் அழிக்கிறோம். உடனே அவன் தனது சகல நிலையங்களையும் ஓரிரு இடங்களில் குவித்து வைத்துவிட்டு உபயோகமில்லாமல் உட்கார்ந்திருக்கிறான். இது மக்களினது பிராந்தியங்களை அவனது தலையீட்டிலிருந்து பிரிவுபடுத்துகிறது. காலப் போக்கில் புரட்சி இயக்கம் விரோதியின் பெரிய நிலையங்களை அழித்துவிடுகிறது.

விரோதியின் படையைமட்டுமன்றி இனத்தையும் நிறத்தையும் சேர்த்தே புரட்சிக்காரர்கள் தாக்குகிறார்கள் என்ற கருத்தை சிலர் பரப்புகிறார்கள். மாற்றினத்தின் குழந்தைகள், முதியோர், பெண்கள், முதலிய பிரஜைகளையும் சேர்த்தே நாம் தாக்குவதாக பிரச்சாரம் செய்யப்படுகிறது. இயக்கத்தை குற்றம் சாட்டும் நோக்கமோ அல்லது, விரோதி அகற்றப்பட்ட பிறகு அவனது இடத்தைப் பிடிக்க முயற்சிக்கிற நமது இனத்துச் சுரண்டல்காரர்களது நோக்கமோதான் இதன் காரணம். எங்கள் இயக்கம் மக்களது இயக்கமாக உள்ளவரை, விரோதிகளது பகுதியைச் சார்ந்த இனம் உட்பட உலகின் எந்த இனத்து மக்களின் அடிப்படை லட்சியங்களுடனும் முரண்படாத லட்சியங்கள்தாம் எங்களுடையவை. நாம் காலனி அதிகாரிகளைத்தான் விரோதிகளாகக் காண்கிறோம். அவர்கள்தான் எங்களது பெண்களையும் குழந்தைகளையும், பிரஜைகளையும் இம்சைகளுக்கு உள்ளாக்குகின்றனர். அவர்கள் எந்த இனத்திடமிருந்து வருகின்றனரோ அந்த இனத்தின்மீது எங்களுக்கு பகைமை இல்லை. ஆனால் காலனியாளர்கள் எங்கள் போரை இனத்துக்கு இனம் எதிரான போராக வேண்டுமென்றே உருமாற்றுகிறார்கள். ஆனால் எங்கள் இயக்கத்தில் எதிரினத்தவரும் மொஸாம்பிக் மக்கள் என்ற ரீதியில் சேர்ந்து காலனியாளர்களை எதிர்க்கும் நிலை இந்த விரோதி உபாயத்தினை முறியடித்துவிட்டது. காலனியத்துக்கும் பாஸிஸத்துக்கும் எதிராகப் போரிடும்படி மொஸாம்பிக்கில் உள்ள அந்த இனத்தவரையே கேட்டு நாங்கள் வேண்டுகோள்களை விடுக்கிறோம். ஆனால் விரோதியின் ராணுவமும் போலீஸும் காலனியக் கட்டுமானத்தின் அரண்கள் எனவே அவை தகர்க்கப்படவேண்டியவை.

## போராளிகளின் கடமையும் கட்டுப்பாடும்

எந்த ஒரு ராணுவத்துக்கும் கட்டுப்பாடு ஒரு அடிப்படையாகும். போர்க்காலத்தில், இந்தக் கட்டுப்பாடு சரியான ஊக்கத்தையும், கட்டளைகளை நிறைவேற்றுகிற துரிதத்தையும் விளைவிக்கும். காலனிய பாஸிஸ ராணுவத்தின் கட்டுப்பாடுகளில் பின்வருபவை முக்கிய அம்சங்களாகின்றன; மேலதிகாரிகள்மீது பயம், தொடர்ச்சியான குரூரமான தண்டனைகள், சுயமான தீர்மானமோ, பகுத்தறிவோ ராணுவகாரனிடம் எழவிடாமல் செய்தல், அதிகாரிகளுக்கும் ராணுவகாரர்களுக்குமிடையே ஒரு திட்டவட்டமான வர்க்கப் பிரிவினையை வைத்துக் கொள்ளல்.

இந்தவகைக் கட்டுப்பாடுகள் எங்கள் கட்டுப்பாட்டு முறையில் இல்லாதவை என்பது வெளிப்படை. எங்கள் கட்டுப்பாட்டின் அத்திவாரம் போராளியின் அரசியல் ஞானமாகும். மக்களின் பாதுகாப்பையும் தேவையையும் நிறைவேற்றக்கூடிய சித்தாந்தங்களைச் செயல்படுத்தும் விதமாகவே போராளிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இந்தவகைக் கட்டுப்பாட்டிலிருந்து பிசகிய நிலை எதுவும் எங்கள் பார்வைக்கு உட்படுகிறது.

மொஸாம்பிக் கெரில்லா



**எங்கள் விடுதலை இராணுவத்தில் பதவிகள் இல்லை. கடமைகள்தான் உள்ளன.**

குருட்டுத்தனமாக கட்டளைகளை நிறைவேற்றிப் பழகியவர்களும், பழைய நம்பிக்கைகளில் கட்டுண்டு கிடப்பவர்களும் எங்கள் அணியில் சேரும்போது இயக்கத்தின் விதிமுறைகளுடன் அவர்களால் லேசில் இசைய முடிவதில்லை. இவர்களது மனோபாவங்களை மாற்றியமைத்துத்தான் இயக்கத்துடன் இவர்களை இணைக்கமுடிகிறது. இந்த அளவில் பிரக்ஞை மாற்றம் ஒன்றன் மூலம்தான் பூர்வகுடியினரை நாம் போராளிகளாக்க இயலும். புதிய இயக்கத்தினுள் இணைப்பு பெறுவதென்பது பிரக்ஞை மாற்றம் ஒன்றினது இன்றியமையாமையைக் காட்டுகிறது. இதற்கும் மேல் சென்று ஒரு பொது உணர்வையும், பொதுநலனுக்கான பொறுப்பினையும் போராளியிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியம். தரப்படுகிற உபகரணங்களும், நிறைவேற்றப்படுகிற கடமைகளும் மக்கள் தொகையினது நலனுக்காகவே என்ற அறிவே பொது உணர்வு. போராளிக்கு இது இன்றி அமையாதது. இந்தக் கட்டுக் கோப்பினுள் நியாயமற்ற கட்டளையும், நியாயமான கட்டளையை நிறைவேற்றாமையும் - இரண்டுமே கட்டுப்பாட்டை பாரதூரமாக மீறியமையாகும்.

போராட்ட இயக்கத்தின் கட்டுப்பாடு, நாங்கள் சமைக்கும் புதிய சமூகத்துக்கு அத்திவாரமாவதால், விவாதங்களுக்கும் அரசியல் கல்விக்கும் இயக்கம் முக்கியத்துவமளிக்கிறது. சர்ச்சைக்குப் பின்பே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. கடமையை நிறைவேற்றும் பிரிவினரது அரசியல் ஞானத்தைக் கணித்தே கடமை தரப்படுகிறது. கடமை நிறைவேற்றப்பட்ட பின்பு விளைவுகள் ஆராயப்படுகின்றன. இது புரட்சிகரச் சித்தாந்தத்தைப் பிரக்ஞை வடிவமாக மாற்றும் முறையாக உதவுகிறது. எங்கள் விடுதலை ராணுவத்தில் பதவிகள் இல்லை. கடமைகள்தான் உள்ளன. ஒரு கடமையைச் செய்து கொண்டிருந்தவருக்கு வேறு கடமை தரப்படும்போது பதவி இறக்கம் ஏற்றம் என்று அது அர்த்தமாகாது. ஏனெனில் கடமைகளிடையே தரவேறுபாடு கிடையாது எல்லாக் கடமைகளும் புரட்சிப் பணிகளாகும் என்பதே இதன் காரணம்.

எங்கள் அக்கறை அணியின் எல்லா அங்கத்தினரிடையிலும் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துதல் - சகோதர உணர்வை உருவாக்குதல் - இதுதான் 'தோழர்' என்ற வார்த்தைக்கே அர்த்தத்தைத் தரும். இந்த வகை உணர்வுக்குத் தடையான இரண்டு முட்டுக்கட்டைகளை நாம் சந்தித்தோம். ஒன்று காலனியத்திலிருந்தும் பழைய மரபிலிருந்தும் பெற்ற அதிகாரக்குணம். மற்றது மட்டரகமான ருசிகளிலும் நலிவிலும் பலவீனத்திலும் இருந்து பிறந்த போலித்தனமான சமத்துவமும், இதன் விளைவாக தங்களிடையே ஒருவருக்கொருவர் மதிப்பு இல்லாமையும். இந்த இரண்டு விதமான குறைபாடுகளும் இயக்கத்தில் கடுமையாக போராடித் தவிர்க்கப்படுகிறவை. முதலாவது குறைபாடு ஜனநாயக உணர்வுக்கு விரோதமானது. இரண்டாவது குறைபாடு எங்கள் கட்டுப்பாட்டையே சீர்குலைப்பது. புரட்சிகரக் கட்டுப்பாடு ஒரு புரட்சிகர ராணுவ இயக்கத்தினது எல்லாக் கட்டத்திலும் முக்யமான ஒன்று.

நாங்கள் சந்திக்கும் கடினமான நிலைமையில், கட்டுப்பாட்டிலிருந்து பின் வாங்கினால், இயக்கத்துக்கு அந்நியமான கருத்துக்களும், நடைமுறைகளும், சந்தேகங்களும், இதைத் தொடர்ந்து அணியினர் வெளியேறலும் தோல்வியும் சம்பவிக்கும். இதனால் கட்டுப்பாடு மட்டுமே, அரசியல் அணி, இயக்கக் கட்டுமானம் யாவற்றையும் காப்பாற்றுகிறது என வேண்டும்.

## மக்கள் உறவு

கட்டுப்பாட்டின் மிக முக்கியமான அம்சம், மக்களுடன் விடுதலை ராணுவத்துக்கு உள்ள தொடர்பாகும். காலனிய ராணுவத்துக்கும், விடுதலை ராணுவத்துக்குமிடையே மக்கள் காணக்கூடிய வேறுபாடு இந்த உறவுதான். எனவே மக்களை மகத்தான கௌரவத்துடன் நடத்துவது விடுதலை ராணுவத்தின் அடிப்படைக் கட்டுப்பாடுகளுள் ஒன்று.

அடக்குமுறையாளனது ராணுவம், அவனது கட்டுப்பாடற்ற சுரண்டல் மனோபாவத்தினது பிரதிபிம்பமாகும். எனவே அவனது ராணுவம் பெண்களைக் கேவலப்படுத்துவதிலும், கொள்ளை, சித்ரவதைகளிலும், மது, போதை மருந்து ஆகியவற்றிலும் ஈடுபடுகிறது. மக்களின் நலனையும் பாதுகாப்பையும் வேண்டிப் பிறந்த புரட்சிகர ராணுவம் இதற்கு நேரெதிரானது. அது பெண்ணின் ரட்சணைக்கும், மக்களது உடமைப் பாதுகாப்புக்கும் செயல்படும்போதே, தனது பிரக்ஞையை சுத்தமாக வைத்திருக்க வேண்டி, மதுவையும், போதைப் பொருள்களையும் தீண்டாமல் ஒதுக்கிவிடுகிறது. பிரக்ஞையை மயக்க வேண்டிய தேவை மனச்சாட்சியைக் கொன்றுவிட்டு காட்டுமிராண்டிகளாக மாறும் அடக்கு முறையாளர்களுடைய தேவை. ஆனால் அடக்கு முறையின் காட்டுமிராண்டித்தனத்துக்கு இலக்கான மக்களைப் பாதுகாக்கும் விடுதலை ராணுவமோ, மக்களின் ராணுவம். இது பிரக்ஞையினை விழிப்புடன் வைத்திருப்பது அவசியம். எனவே போதைப் பொருள் மது எதனையும் விடுதலை ராணுவம் தீண்டுவதில்லை.

சில பகுதிகளில், முதலாளித்துவ ருசிகளுக்கு ஆட்பட்டவர்கள், மதுவும் மாதும் புரட்சிக்கு எதிரானதல்ல என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் இது நசிவுவாதம். எப்படி யுத்தநிலையில் சௌகர்யமான வாழ்வு கிடையாதோ அப்படியே புரட்சி இயக்கத்தில் பிரக்ஞையின் மயக்க நிலைகளுக்கு இடமில்லை. முதல்படியாக போர்ராளிக்கு ஓய்வே கிடையாது என்பது உணரப்படவேண்டும். எனவே, மது, மாது இவற்றைப் புறக்கணிப்பதென்பது அடிப்படை விஷயமாகும். இது புரட்சி இராணுவத்தின் முகம் என்ன என்பதையே காட்டித்தருகிறது; மக்களுடன் உள்ள உறவை நிர்ணயிக்கிறது; மக்களுடன் உள்ள உறவின் மூலம் செயல்பாட்டின் குணத்தை வரையறுக்கிறது.

எங்கள் இயக்கத்தின் சுலோகம், 'கல்வி, உற்பத்தி, போர்'. அரசியல் கல்வி மூலமும், தொழில் நுட்பக் கல்வி மூலமும் போராட்டத்துக்குத் தேவையான மனோபாவத்தையும், உபகரணங்களையும் உருவாக்குகிறோம். உற்பத்தியின் மூலம் சமூக ரீதியான செயல்முறையாக எங்களது சிந்தனை வடிவம் பெறுகிறது. எங்கள் 'சமூகத்தின் மூலத்தை அடையாளம் காட்டி, எங்களை ஒன்றுபடுத்துகிறது. உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் அதன் அபிவிருத்திக்கான புதிய உத்திகளை நாங்கள் கண்டு பிடிக்கிறோம்..

போராட்டம் எங்கள் குறைபாடுகளை தவிர்க்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி எங்களைப் புதுமனிதர்களாக்குகிறது. சுரண்டுகிற சக்திகளிலிருந்து விடுபட்ட புதிய சமூகமாக எங்களைப் பிறப்பெடுக்க வைக்கிறது.

காலனியத்துக்கு எதிரான யுத்தத்தின் மூலம், மக்களை ஆண் பெண் ஈறாக விடுவித்து பிடிபட்ட நிலங்களை மீட்கிற பணியில் மக்களின் புரட்சிப் போராட்டம் மொஸாம்பிக்கில் நடைபெறுகிறது. போராட்டத் தளங்களில் அரசியலில் இருந்து உற்பத்திவரை கல்வி வழங்கப்படுகிறது. இதன் விளைவாகத் தேர்ச்சி பெறும் போராளி ஒரு சமூக மாற்றத்தின் தூதுவனாகப் பிறக்கிறான்.

### 19.1.86

ட்டக்களப்பில் எமக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் 5 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர்.

ட்டக்களப்பிலுள்ள திருக்கோயிலில் கண்ணிவெடித்தாக்குதல நாம் மேற்கொண்டபோது 3 இராணுவத்தினர் பலியானுர்கள்.

### 22.1.86

ருகோணமலேயிலுள்ள கும்புறுப்பிட்டியில் பொதுமக்களேத்தாக்க வந்த இராணுவத்தினர்மீது ம் தாக்குதல் நடத்தியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### 23.1.86

தெல்லிப்பளேயில் இராணுவத்தினருடன் நேரடி மோதல் ஏற்பட்டபோது 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 8 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தில் எம்மால் 2 ஹெலிகப்டர்கள் சுட்டு விழ்த்தப்பட்டன. குண்டு விசும் விமான மொன்றும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

### 24.1.86

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோயிலில் எமது தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தில் ஜீப்பொன்றும் சேதமாக்கப்பட்டது.

### 26.1.86

ஒட்டி சுட்டானில் எம்முடன் நடைபெற்ற நேரடி சமரில் நான்கு போலீஸ் அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர்.

### 27.1.86

மூதூரில் எமது அதிரடித் தாக்குதலில் 5 சிங்கள ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனா.

திருகோணமலேயிலுள்ள கட்டைப் பறிச்சானில் எம்மவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 10 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### 29.1.86

மன்னுர் மாவட்டத்திலுள்ள பரப்பு கடந்தானில் 25 வாகனங்களில் வந்த இராணுவத்தினருடன் எமது அதிரடிப்படை கடுமையான தாக்குதலே மேற்கொண்டதில் 2 லெப்டினன்ட்கள், 3 சார்ஜன்கள் உட்பட 32 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 8 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலே மாவட்டத்திலுள்ள சம்பூரில் பொதுமக்களேத் தாக்கிய இராணுவத்தினர் மீது நாம் அதிரடித்தாக்குதல் மேற்கொண்டபோது 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு ஹெலிகப்டரும் சேதமாக்கப்பட்டது.

### 1.2.86

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தர்மபுரம் எனுமிடத்தில் இராணுவத்தினரை எமது வீரர்கள் முற்றுகையிட்டு தாக்கியதில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு கவச வாகனங்கள் முற்ருக சேதமடைந்தன.

### 2.2.86

எமது முற்றுகையில் சிக்கிய இராணுவத்தினரின் உதவிக்கு வந்த ஹெலிகப்டர் ஒன்று கிளிநொச்சியிலுள்ள தர்மபுரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

### 4.2.86

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும் எமக்கும் நேருக்கு நேர் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இறந்த, காயமடைந்த இராணுவ வீரர்களேத் தூக்கிக் கொண்டு இராணுவத்தினர் பின்வாங்கிவிட்டனர். இச்சம்பவத்தின்போது இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதத்தின் அளவு தெரியவில்லே.

### 5.2.86

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலுப்படிச் சேனேயில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விமானப் படை ஹெலிகப்டர் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளாகியது. அதிலிருந்த இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கூடவந்த இரு விமான ஓட்டிகளும், முகாம் பொறுப்பதிகாரியும் *படுகாயமடைந்தனர்.

### 7.2.86

தொண்டைமாணுறு இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவ லாரி (Truck) மீது எம்மவர்கள் தாக்குதல் நடத்தியதில், இராணுவ லாரி முற்ருக சேதமடைந்தது அதிலிருந்த 5 இராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

காரை நகரிற்கும், ஊர்காவற்துறைக்கும் இடையில் உள்ள கடலில் கடற்படை கப்பல் ஒன்றின்மீது எமது வீரர்களால் தாக்குதல் நடாத்தப்பட்டது. கடற்படை தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லே.

### 9.2.86

பருத்தித்துறையில் பொதுமக்களே அழிக்கும் நோக்கத்துடன் வந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்களால் எதிர்த்தாக்குதல் நடாத்தப்பட்டது பலத்த சேதத்திற்கு பின்பு இர்ாணுவம் பின்வாங்கியது. (இச்சம்பவத்தில் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட இழப்பு விபரம் தெரியவில்லே.)

### 11.2.86

வாழைச்சேனேயில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது மூன்று போலீஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் இரு கமாண்டோக்கள் படுகாயமடைந்தனர்.

## போர்முனையில் புலிகள் 1986

### 14.3.86

ருகோணமலே மாவட்டத்திள்ள பாலம் போட்டாறு என்னுடத்தில் நான்கு வாகனத்தில் த கடற்படையினர் மீது எம்ர்கள் தாக்குதல் நடத்தியதில். இராணுவ லாரி (Truck) ருகச் சேதமடைந்தது. இதில் த 4 கடற்படையினரும் ஸ்ததிலேயே கொல்லப்பட்டனர். கடற்படையினர் காயமடைந்தனர்.

ருகோணமலே மாவட்டத்திள்ள திரியாய் எனுமிடத்தில் து வீரர்களேச் சுற்றி வளேத்த ராணுவத்தினருக்கும் எமக்கும் டையே நேரடி மோதல் ஏற்பட்டது. இச்சம்பவத்தின் போது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பல இராணுதினர் காயமடைந்தனர். ஏனேர்கள் பின் வாங்கிவிட்டனர். சம்பவத்தின் போது எம்மால் புதங்களும், ரவைக்கூடு, தலேக்சங்கள் போன்றவையும் கைப்றப் பட்டன.

### 15.3.86

ாழ் மாவட்டத்திலுள்ள ாண்டைமாணுறு இராணுவ ாமிற்கு மிக அண்மையிருந்த பாலம் எம்மால் தகர்க்பட்டது. இப்பாலத்தின் மேல் வு பகலாக இராணுவத்தினர் வல் கடமையில் இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. சந்தர்ப்பத்தில் ஒரு இராணுவர் கொல்லப்பட்டார். மேலும் இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இப்பாலம் தகர்க்பட்டதனுல் அருகருகே உள்ள வெட்டித்துறை தொண்டைமாறு இராணுவ முகாம்களுக்ன தரைப்பாதை துண்டிக்கப்பட்டது.

### 16.3.86

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து இனப்படுகொலேயை மேற்கொள்வதற்காக சுமார் 40 இராணுவத்தின்ர் புறப்பட்டு, முகாமிலிருந்து சுமார் 100 யார் தூரத்திலுள்ள பனேக் கூட்டங்களுக்கூடாக வந்து கொண்டிருந்த போது எமது அதிரடிப்படைப்பிரிவினர் இவர்கள் மீது கடுமையான தாக்குதலே மேற்கொண்டனர். எமது தாக்குதலுக்கு இலக்காகிய இராணுவத்தினரில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இறந்த, காயமடைந்த இராணுவத்தினரை தூக்கிக் கொண்டு அவர்கள் முகாமிற்குள் பின்வாங்கிச் சென்றனர்.

### 17.3.86

திருகோணமலே மாவட்டத்திலுள்ள கிண்ணியா எனுமிடத்தில் எமது வீரர்களினுல் இரு சிங்கள ஊர்காவல் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### 19.3.86

மன்னுர் மாவட்டத்திலுள்ள சிலாபத்துறை முகாமிலிருந்து 3வாகனங்களில் வந்த இராணுவத்தினர் மீது எமது அதிரடிப் படையினர் பதுங்கித் தாக்குதலே மேற்கொண்டனர். இதில் இராணுவ உயரதிகாரி உட்பட 6 இராணுவத்தினரும் 3 சிங்கள ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர். ஜீப்பொன்றும் முற்ருக சேதமாகியது.

### 20.3.86

திருகோணமலே மாவட்டத்திலுள்ள புல்மோட்டை எனுமிடத்தில் சிங்கள அரசினுல் சட்டவிரோதமாக குடியேறியிருக்கும் சிங்கள குடியேற்றங்களுக்கு நீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட 6 பிரதான, பாரிய: பெறுமதிமிக்க நீர்த்தாங்கிகள் எம்மால் தகர்க்கப்பட்டன.

### 21.3.86

எமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த யாழ் நகரத்தை மீண்டும் அழித்து சேதமாக்கும் நோக்குடன் யாழ் கோட்டை, நாவற்குழி. தொண்டைமாறுை இராணுவமுகாம்களிலிருந்தும், காரை நகர் கடற்படை முகாமிலிருந்தும் ஒரே நேரத்தில் புறப்பட்ட இராணுவ, கடற்படையினர் மீது எமது அதிரடிப்படைப் பிரிவுகள் தனித்தனியே கடுமையாக மோதினுர்கள். இதில் நாவற்குழியில் இடம் பெற்ற மோதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். கோட்டை முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் அருகிலுள்ள மீன் சந்தையில் நிலேயெடுத்த போது எமது தாக்குதலுக்கு 6 இராணுவத்தினர் பலியாயினர். மேலும் கோட்டையருகில் இடம் பெற்ற மோதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு சார்ஜண்ட் உட்பட 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### 24.3.86

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட 15 இராணுவத்தினருக்கு அவர்கள் வந்த பாதையின் அருகில் தயாராக இருந்த எமது கெரில்லாப் படையினர் திடீர் பதுங்கித்தாக்குதலே மேற்கொண்டனர். இதனுல் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தும் உள்ளார்கள். இதன்பின்பு எமது தாக்குதலுக்கு இலக்காகிய இராணுவத்தினரின் உதவிக்காக முகாமிலிருந்து வந்த 20 இராணுவத்தினர் அருகிலுள்ள கல் குவியலுக்கு பின்னுல் நிலேயெடுத்தனர். இக்கற்குவியலே நோக்கி எமது கெரில்லாப் படையினர் R.P.G. கொண்டு தாக்கியதில் கற்குவியல் தகர்ந்தது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர், முகாமிற்கு அருகிலுள்ள விடுகளே கொளுத்திக் கொண்டிருந்த வேளேயில் விடுதலேப்புலிகளின் அதிரடிப்படையினர் அங்கு விரைந்து சென்று கடுமையான தாக்குதலே மேற்கொண்டனர். இதில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது.

### 24.1.86

அம்பாறை மாவட்டத்திலுள்ள ...ருக்கோயிலில் எமது தாக்குதலில் ... இராணுவத்தினர் கொல்லப் ...பட்டதுடன் இரு இராணுவத் ...தினர் படுகாயமடைந்தனர். இச் ...ம்பவத்தில் ஜீப்பொன்றும் சேத ...மாக்கப்பட்டது.

### 26.1.86

...ஒட்டி சுட்டானில் எம்முடன் ...டைபெற்ற நேரடி சமரில் ...நான்கு போலீஸ் அதிரடிப்படை ...யினர் கொல்லப்பட்டனர்.

### 27.1.86

மூதூரில் எமது அதிரடித் தாக் ...குதலில் 5 சிங்கள ஊர்காவல் ...படையினர் கொல்லப்பட்டனா.

திருகோணமலையிலுள்ள கட்டைப் ...பறிச்சானில் எம்மவர்களால் மேற் ...கொள்ளப்பட்ட தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட் ...டதுடன் 10 இராணுவத்தினர் ...படுகாயமடைந்தனர்.

### 29.1.86

மன்னார் மாவட்டத்திலுள்ள ...பரப்பு கடந்தானில் 25 வாகனங் ...களில் வந்த இராணுவத்தினருடன் ...எமது அதிரடிப்படை கடுமையான ...தாக்குதலை மேற்கொண்டதில் 2 ...லெப்டினன்ட்கள், 3 சார்ஜன்கள் ...உட்பட 32 இராணுவத்தினர் ...கொல்லப்பட்டனர். 8 இராணு ...வத்தினர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தி ...லுள்ள சம்பூரில் பொதுமக்களைத் ...தாக்கிய இராணுவத்தினர் மீது ...எம் அதிரடித்தாக்குதல் மேற் ...கொண்டபோது 2 இராணுவத் ...தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு ...ஹெலிகப்டரும் சேதமாக்கப் ...பட்டது.

### 1.2.86

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தர்மபுரம் எனுமிடத்தில் இராணுவத்தினரை எமது வீரர்கள் முற்றுகையிட்டு தாக்கியதில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு கவச வாகனங்கள் முற்றாக சேதமடைந்தன.

### 2.2.86

எமது முற்றுகையில் சிக்கிய இராணுவத்தினரின் உதவிக்கு வந்த ஹெலிகப்டர் ஒன்று கிளிநொச்சியிலுள்ள தர்மபுரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

### 4.2.86

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும் எமக்கும் நேருக்கு நேர் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இறந்த, காயமடைந்த இராணுவ வீரர்களைத் தூக்கிக் கொண்டு இராணுவத்தினர் பின்வாங்கிவிட்டனர். இச்சம்பவத்தின்போது இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதத்தின் அளவு தெரியவில்லை.

### 5.2.86

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலுப்படிச் சேனையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விமானப் படை ஹெலிகப்டர் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளாகியது. அதிலிருந்த இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கூடவந்த இரு விமான ஓட்டிகளும், முகாம் பொறுப்பதிகாரியும் *படுகாயமடைந்தனர்.

### 7.2.86

தொண்டைமானாறு இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவ லாரி (Truck) மீது எம்மவர்கள் தாக்குதல் நடத்தியதில், இராணுவ லாரி முற்றாக சேதமடைந்தது அதிலிருந்த 5 இராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

காரை நகரிற்கும், ஊர்காவற்துறைக்கும் இடையில் உள்ள கடலில் கடற்படை கப்பல் ஒன்றின்மீது எமது வீரர்களால் தாக்குதல் நடாத்தப்பட்டது. கடற்படை தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

### 9.2.86

பருத்தித்துறையில் பொதுமக்களை அழிக்கும் நோக்கத்துடன் வந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்களால் எதிர்த்தாக்குதல் நடாத்தப்பட்டது பலத்த சேதத்திற்கு பின்பு இராணுவம் பின்வாங்கியது. (இச்சம்பவத்தில் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட இழப்பு விபரம் தெரியவில்லை.)

### 11.2.86

வாழைச்சேனையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலின் போது மூன்று போலீஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் இரு கமாண்டோக்கள் படுகாயமடைந்தனர்.

### 15.2.86

மன்னார் மாவட்டம் முருங்கனில் இராணுவத்தினருக்கும் எமக்கும் ஏற்பட்ட நேரடி மோதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 25 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தின்போது ஜீப்பொன்று முற்றாகச் சேதமடைந்தது.

எமது தாக்குதலில் சிக்கிய இராணுவத்தினருக்கு உதவியாக முருங்கன் முகாமிலிருந்து 3 ஜீப்பில் வந்த இராணுவத்தினர் மீது எம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், ஜீப்பொன்றும் முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

### 19.2.86

மன்னார் மாவட்டத்திலுள்ள பூநகரி எனுமிடத்தில் இராணுவ லாரியில் வந்த இராணுவத்தினர் மீது எம்மால் கைக்குண்டுகள் எறியப்பட்டபோது அதிலிருந்த 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 10 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள அல்லை கந்தளாய் வீதியில், சேருநுவர எனுமிடத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலில் 25 இராணுவத்தினரும் 55 ஊர் காவல் படையினரும் கொல்லப்பட்டனர். இச்சிங்கள ஊர்காவல் படையினர் 6 வார கால ஆயுதப் பயிற்சி எடுத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் அரச பயங்கரவாதிகளின் மீது நடைபெற்ற கண்ணி வெடித் தாக்குதல்களில், இச்சம்பவத்திலேயே அதிகளவு அரச படையினர் கொல்லப்பட்டனர்.

### 20.2.86

நடந்து வந்த இராணுவத்தினர் மீது திருகோணமலை மாவட்டம் திரியாய் என்னுமிடத்தில் எமது வீரர்கள் நேரடித் தாக்குதல் நடத்தியதில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### 21.2.86

ஜீப்பில் வந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்கள் கைக்குண்டெறிந்ததில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச் சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொடுவாமடுப்பாத்தில் நடைபெற்றது.

### 25.2.86

மன்னார் கோட்டைக்கும் தள்ளாடி இராணுவமுகாமிற்குமிடையில், கோட்டைக்கு அருகிலுள்ள பாலத்தின் மீது இரு இராணுவ லாரிகளில் இராணுவத்தினர் வந்த வேளையில் எமது வீரர்கள் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தியதில் 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு இராணுவ வண்டிகளும் முற்றாக சேதமடைந்தன.

## ...ணையில் புலிகள் 1986

### 16.3.86

வல்வெட்டித்துறை இராணுவ ...முகாமிலிருந்து இனப்படு ...கொலையை மேற்கொள்வதற்காக ...சுமார் 40 இராணுவத்தினர் புறப் ...பட்டு, முகாமிலிருந்து சுமார் ...200 யார் தூரத்திலுள்ள பனைக் ...கூட்டங்களுக்கூடாக வந்து ...கொண்டிருந்த போது எமது ...அதிரடிப்படைப்பிரிவினர் இவர்கள் ...மீது கடுமையான தாக்குதலை ...மேற்கொண்டனர். எமது தாக்கு ...தலுக்கு இலக்காகிய இராணுவத் ...தினரில் 6 இராணுவத்தினர் ...கொல்லப்பட்டனர். மேலும் ...பலர் படுகாயமடைந்தனர். இறந்த, ...காயமடைந்த இராணுவத்தினரை ...தூக்கிக் கொண்டு அவர்கள் முகா ...மிற்குள் பின்வாங்கிச் சென்றனர்.

### 17.3.86

திருகோணமலை மாவட்டத்தி ...லுள்ள கிண்ணியா எனுமிடத்தில் ...எமது வீரர்களினால் இரு சிங்கள ...ஊர்காவல் படையினர் சுட்டுக் ...கொல்லப்பட்டனர்.

### 19.3.86

மன்னார் மாவட்டத்திலுள்ள ...சிலாபத்துறை முகாமிலிருந்து ...வாகனங்களில் வந்த இராணு ...வத்தினர் மீது எமது அதிரடிப் ...படையினர் பதுங்கித் தாக்குதலை ...மேற்கொண்டனர். இதில் இரா ...ணுவ உயரதிகாரி உட்பட 6 ...இராணுவத்தினரும் 3 சிங்கள ...ஊர்காவல் படையினரும் கொல் ...லப்பட்டனர். ஜீப்பொன்றும் முற் ...றாக சேதமாகியது.

### 20.3.86

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டை எனுமிடத்தில் சிங்கள அரசினும் சட்ட விரோதமாக குடியேறியிருக்கும் சிங்கள குடியேற்றங்களுக்கு நீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட 6 பிரதான, பாரிய, பெறுமதி மிக்க நீர்த்தாங்கிகள் எம்மால் தகர்க்கப்பட்டன.

### 21.3.86

எமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த யாழ் நகரத்தை மீண்டும் அழித்து சேதமாக்கும் நோக்குடன் யாழ் கோட்டை, நாவற்குழி, தொண்டைமானாறு இராணுவமுகாம்களிலிருந்தும், காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் ஒரே நேரத்தில் புறப்பட்ட இராணுவ, கடற்படையினர் மீது எமது அதிரடிப்படைப் பிரிவுகள் தனித்தனியே கடுமையாக மோதினார்கள். இதில் நாவற்குழியில் இடம் பெற்ற மோதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். கோட்டை முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் அருகிலுள்ள மீன் சந்தையில் நிலையெடுத்த போது எமது தாக்குதலுக்கு 6 இராணுவத்தினர் பலியாயினர். மேலும் கோட்டையருகில் இடம்பெற்ற மோதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு சார்ஜன்ட் உட்பட 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### 24.3.86

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட 15 இராணுவத்தினருக்கு அவர்கள் வந்த பாதையின் அருகில் தயாராக இருந்த எமது கெரில்லாப் படையினர் திடீர் பதுங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தும் உள்ளார்கள். இதன்பின்பு எமது தாக்குதலுக்கு இலக்காகிய இராணுவத்தினரின் உதவிக்காக முகாமிலிருந்து வந்த 20 இராணுவத்தினர் அருகிலுள்ள கல் குவியலுக்கு பின்னால் நிலை யெடுத்தனர். இக்கற்குவியலை நோக்கி எமது கெரில்லாப் படையினர் R.P.G. கொண்டு தாக்கியதில் கற்குவியல் தகர்ந்தது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர், முகாமிற்கு அருகிலுள்ள வீடுகளை கொளுத்திக் கொண்டிருந்த வேளையில் விடுதலைப்புலிகளின் அதிரடிப்படையினர் அங்கு விரைந்து சென்று கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். இதில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது.

### 25.3.86

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது எமது அதிரடிப் படையினர் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் ரஞ்சன்திமால் எனும் கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஒரு இராணுவ கோப்ரல் உட்பட மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாயில் இரு ஜீப்புகளிலும் கவசவாகனத்திலும் வந்த இராணுவத்தினர் மீது கித்துலூத்து எனுமிடத்தில் விடுதலைப்புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் கவசவாகனம் முற்றாக சேதமடைந்தது. இதில் பயணம் செய்த லெப்டினன்ட் கெட்டியாராச்சி உட்பட 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கவசவாகனத்திற்கு பின்னால் வந்த ஜீப், கண்ணிவெடியில் உண்டான பள்ளத்தில் விழுந்து சேதமுற்றது. இதில் பிரயாணம் செய்த இராணுவத்தினர் காயமடைந்தனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள தொண்டைமானாறு இராணுவ முகாமிலிருந்து அதன் அருகிலுள்ள இரும்பு பாலத்ினூடு நடந்து வந்த இராணுவத்தினர் மீது எமது விடுதலைப் போராளிகள் தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள டொலர் பண்ணையிலிருந்து ஒரு பஸ் வண்டியில் இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் புறப்பட்டு வந்து கொண்டிருக்கும் போது எமது அதிரடிப்படை கடுமையான தாக்குதலை மேற்கொண்ட போது இராணுவ, ஊர்காவல் படைகளைச் சேர்ந்த 5 பேர் கொல்லப்பட்டதுடன், 5 பேர் படுகாயமடைந்தனர்.

### 27.3.86

யாழ் மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை இராணுவ முகாமின் எல்லையருகே ஊர்ந்து சென்ற எமது வீரர்கள் முகாமினுள் காவலில் நின்ற இராணுவ வீரரை சுட்டுக் கொன்றார்கள்.

### 28.3.86

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா எனுமிடத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகளின் கெரில்லாப்படையினர் கண்ணி வெடிகொண்டும், வீதியின் இரு மருங்கிலும் சங்கிலிக் கோர்வையாக அமைக்கப்பட்ட கைக்குண்டுகளைக் கொண்டும்தாக்குதலை மேற்கொண்டனர் இத்தாக்குதலில் கவச வாகனமொன்று முற்றாக சேதமடைந்தது. இக்கவசவாகனத்தின் இருமருங்கிலும் நடந்து வந்த இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர். மொத்தமாக இச்சம்பவத்தில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### 31.3.86

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை எனுமிடத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கைக்குண்டெறிந்ததில் இரு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை எனுமிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு எமது போராளிகள் ட்ரக்டரில் சென்று கொண்டிருந்த போது எதிர்ப்பட்ட இராணுவத்தினருடன் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டார்கள். இத்தாக்குதலானது அதிகாலை 5.30 மணியிலிருந்து பகல் 11 மணிவரை நடைபெற்றது. எமது தாக்குதலில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

# வீர வணக்கம்

**1986ம் ஆண்டு போர்க்களத்தில் மரணமடைந்த தோழர்களுக்கு**



கருளி



பாரூக்



ரவிக்குமார்

(ஈசன்)
2.1.86

க. மனோகரன்
(ஜெயசீலன்)
6.1.86

கி. ரகுநாதன்
(பிலிப்ஸ்)
16.1.86

சி. இதயரூபன்
(ரூபன்)
16.1.86

ரா. ஜெகநாதன்
(உக்கு)
16.1.86

(இந்திரன்)
17.1.86

இ. பிரீஸ்
(ரோஸ்மன்)
17.1.86

(தாஸ்)
18.1.86

(ராஜ்)
18.1.86

சகாயராஜா
(அரசன்)
18.1.86

ச. ஜெயராஜ்
(கலா)
18.1.86

கி. மரியதாஸன்
(பாரூக்)
18.1.86

யோ. செல்வகுமார்
(விநோத்)
25.1.86

லெப். மகேஸ்வரன்
(சசி)
26.1.86.

(உமாகாந்த்)
29.1.86


சே. ஞானசுந்தரம்
(சம்பந்தன்)
30.1.86

ஆ.கு. ரமேஷ்
(சுகு)
30.1.86

காப்டன் பா. மனோகரன்
(கருளி)
31.1.86

அ. சேகர்
(6.2.86)

பாலா
6.2.86



ஜெயசீலன்



பிலிப்ஸ்




தர்மராஜன்



அரசன்



கலா




சசி



சம்பந்தன்



சுகு



முரளி

வே.தெ. சிகாமணி
(முரளி)
8.2.86

ச. யோகராஜா
(தர்மராஜன்)
8.2.86

ஞா. அருள்ஞானதாஸ்
(சோமன்)
8.2.86

(மகேஸ்வரன்)
9.2.86

(வாணன்)
11.2.86

(பாலன்)
11.2.86

(சிவா)
13.2.86

(பெரியவன்)
19.2.86

(ஆறுமுகம்)
19.2.86

(சுரேந்தர்)
20.2.86.

வி. தயாளன்
(ஸ்ரீநாத்)
22.2.86

(விநோத்)
22.2.86

(தமிலன்)
25.2.86

(லூகாஸ்)
27.2.86

இ. கணேசகுமார்
(சுஜன்)
8.3.86

(பெரியதம்பி)
10.3.86

ஆ. பாஸ்கரன்
(கருணை)
10.3.86

லெப். யோக ராஜா
(ரவிகுமார்)
10.3.86


(ரஞ்சன்)
11.3.86



காண்டீபன்




புவிராஜ்




உமாராம்



ஸ்டார்



ஸ்ரீநாத்



வதனன்



பெஞ்சமின்



பெரியதம்பி



கோபு



சுஜன்

(ஜீவன்)
11.3.86

மூ. சந்திரகுமார்
(உமாராம்)
12.3.86

(அன்டனி)
12.3.86

தர்மலிங்கம்
(பரன்)
16.3.86

சந்திரசேகரி
(சங்கரன்)
16.3.86

பா. போல்ராஜ்
(டொனு)
20.3.86

இ. துரைசிங்கம்
(ஜெகன்)
21.3.86

க. ஜெயந்தன்
(கார்த்திக்)
27.3.86

(ராஜன்)
28.3.86

றேமன்
(நிமால்)
30.3.86

வா. பொன்னம்பலம்
(ஸ்டார்)
31.3.86

(விமல்ராஜ்)
31.3.86

ஸ்ரீஸ்கந்தநாதன்
(ஸ்டாலின்)
1.4.86

ச. சிவநாதன்
(வதனன்)
2.4.86

க. பாலசுந்தரம்
(பெஞ்சமின்)
2.4.86

(ஜோன்)
2.4.86

(மோகன்)
2.4.86

ரா. உதயதாசன்
(புவிராஜ்)
5.2.86

செ. சாந்தகுமார்
(காண்டீபன்)
6.4.86

செ. ஸ்ரீதரன்
(கோபு)
6.4.86

## விடுதலை வீரன்

அன்பே வடிவானவர்களுக்கு
மரணம் எப்போதும் நண்பன்.
எனவே எனக்கு பயமில்லை.

முதுகில் கனக்கும்
எந்திரத் துவக்குடன்
வனங்களில் அலைகிறேன்.
காலடிகளில் பதிகின்றன
நம்பிக்கையின் சுவடுகள்.

நான் நிழல்.
எனது செயல்களே நிஜம்
- கண்ணி வெடிகளின் முழக்கம்
படைத்தளபதியின்
உறக்கத்தைச் சிதறடிக்கும்
- நேற்றிருந்த சிப்பாய்
இன்று இறந்திருப்பான்.

எல்லோரும் தங்களை உலகுக்குக்
காட்டத்துடிக்கும் போது
நானோ உலகத்தின் கண்களிலிருந்து
மறைந்து நின்று போராடுகிறேன்.
* 'எனது மக்களே எனது மலைகள்'
தங்கள் குகைகளில் என்னை
மறைத்து விடுவார்கள்.

என்றைக்காவது ஒரு நாள்
எதுவும் நிகழலாம்.
இராணுவத்தால் அரவமில்லாமல்
பிடிக்கப்படலாம்.
யாரும் காணமல் நதிக்கரையில்
பிணமாகக் கிடக்கலாம்.

அது நானல்ல. என் நிழல்.
நிழலை மட்டும் தான்
அவர்களால் அழிக்க முடியும்.

எந்தக் கவிஞனும்
என்னைப் பாட மாட்டான்
ஆனால் கிராம மக்கள்
என்னை மறக்க மாட்டார்கள்.
துயரம் மௌனமாய் கவிய
நான் இல்லாமல் போனதெப்படியென
நண்பர்கள் நினைத்திருப்பார்கள்

எப்போதும் காணமுடியாதவாறு
எனது உடல் அழிக்கப் படலாம்.

அலைகளோடு எழுந்து
இரவினில் வருவேன்.
பனிப்படலமென இறங்கி
வனங்களில் மிதப்பேன்.

தோழர்கள் தாகத்துடன்
குளங்களில் குனியும் போது
நீரலைகளில் தெளியும் என் வடிவம்.
என்னையே அருந்தி
பயணத்தைத் தொடர்வார்கள்
போராட்டத்தை நோக்கி.

- முகம்மது ஜமால்.

* பாப்லோ நெருடாவின் கவிதை வரி



## அழிவற்ற மரணம்

பெண் போராளி லோரேனு பாரோஸுக்காக

நேற்று ஒரு முதியவருடன்
உரையாடிக் கொண்டிருந்தேன்
அவருக்கும் உன்னைப் போலவே கண்கள்
சதா சிரிக்கும் விழிகளின்
ஓரங்களில் மின்னும் அவதானம்
வானவில்லின் வருகையைக் கூட
முன்னரே உணரும்.

அமைதி தவழும் மலைச்சாரல்களில்
யாரும் சொல்லாமலே அறிந்து கொண்ட
பச்சைப் புற்கள் காற்றிலாடின
நீளிதழ்களை சிலுவைக் குறியிட்டு.

காலத்தை உணர்ந்திருந்த பறவைகள்
அப்போது சோககீதமிசைத்தன.

மழையும் பருவம் மீறி வர்ஷித்தது.
உனது குருதி நனைந்து
விருட்சங்களின் வேர்களில் பாய்ந்தது
நிலமெங்கும் நீரோடைகளின்
புதுப்புனலில் கலந்தது.

வீழ்ந்த உனது அழகிய உடலைச்
சுமந்திருந்த நில மகளும்
துக்கத்தினூடே வியந்திருந்தாள்.
'மீண்டும் என்னிடம் சேர்ந்து விட்டாய்'.

உனது கவிதையில் வரும்
முகையவிழாத அல்லிகள்
இன்று மலர்ந்து விட்டன -
உனது கண்களில் கனிந்த அன்பாக
இரவின் மின்மினியாக இராமல்
சுடர் நிலைத்தெரியும் உன் கண்களில்.
அவற்றில் மழைக்கால
அல்லிகளின் பிரகாசம்.

உனது திடீர் மரணம்
எங்களது நாட்களையும்
எதிர்பார்க்கச் சொல்கிறது.
நினைவில் சதா ஊடாடுகிறது.
எல்லாம் கண நேரச் சோகம்தான்.

இப்போது எங்களுக்குத் தேவை -
சுழலும் வாழ்க்கைச் சக்கரம்
உனது லட்சிய வேட்கையை
எங்களிடம் கைமாற்ற வேண்டும்.
உனது கரங்கள் எங்களதாக,
நீ விதைத்த மலர்ச் செடிகளை
நாங்கள் வளர்க்கிறோம்.

— எட்கார் மாரனன்.

(லோரேனு பாரோஸ் - பிலிப்பைன்ஸைச் சேர்ந்த இவர் ஒரு கவிஞர். மாணவர் இயக்கத்திலிருந்து பிறகு பிலிப்பைன்ஸின் முதல் பெண் போராளிகள் அமைப்பை உருவாக்கியவர். 1976 மார்ச்சில் இவர் ஜெயிலிலிருந்து தப்பிய போது நடந்த சண்டையில் ராணுவத்தால் கொல்லப் பட்டார்.)



## இளம்புலியின் மறைவு



இருதய நேசன் பீரிஸ். மன்னார் மாவட்டத்தில் முத்தரிக்கும் கடற்கிராமமான அரிப்பு அவனது பிறப்பிடம். ரொஸ்மன் — அவனுக்கு இயக்கம் இட்ட பெயர். 12வது வயதில் இயக்கத்தில் இணைந்த இருதயநேசன் இயக்கத் தோழர்களுள் இளமையானவனாக விளங்கினான். அவ்விளம்புலி தாய்நாட்டின் விடுதலையை தன் ஆத்ம தாகமாக நெஞ்சில் ஏற்றி ஆர்வத்துடன் செயல்பட்டான்.

பழகுவதற்கு மிகவும் இனியவன். எப்போதும் சிரித்த முகம். ஏதாவது செய்ய வேண்டும் என்று சதா துடிக்கும் மன இயல்பு.

இளவயது காரணமாக ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சண்டையிடச் செல்ல முடியவில்லையே எனக் கவலை கொள்வான். 17-1-86ல் அவன் விரும்பிய சந்தர்ப்பம் கிடைத்தது. சிங்கள இராணுவத்தோடு ஏற்பட்ட நேரடி மோதல் ஒன்றில் முதன் முறையாகக் கலந்து கொண்டான். அதுவே அவனது கடைசிக் களமாகவும் அமைந்தது. புதியதொரு தலைமுறைக்கு அறைகூவலாக அமைந்தது அவனது வீரமரணம். இயக்கத் தோழர்கள் அனைவரது அன்புக்குப் பாத்திரமாய் இருந்த இருதய நேசன் இன்று தமிழ் மக்கள் அனைவரது இதயங்களில் வாழ்

# எரித்திரியா



எரித்திரிய பெண் போராளி

எரித்திரிய தேசிய விடுதலைப் போராட்டம் பல அம்சங்களில் தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை ஒத்தது. ஈழத் தமிழர்களைப் போன்று எரித்திரிய மக்களும் ஒரு சிறிய தேசிய அமைப்பைக் கொண்டவர்கள். பெரிய தேசிய இனமாகிய எதியோப்பாவின் இனவாத அடக்கு முறை ஆட்சிக்கு எதிராக எரித்திரிய மக்கள் தனியரசு கோரிப் போராடி வருகிறார்கள். ஆயுத வடிவிலான இந்தப் போராட்டம் கடந்த கால் நூற்றாண்டு காலமாக நடைபெற்று வருகிறது.. ஈழத் தமிழர்களைப்போன்று தேசிய நிர்ணய உரிமையின் (தனியரசு நிறுவும் உரிமையின் அடிப்படையில் எரித்தியர்கள் இப்போராட்டத்தை தெறிப்படுத்தியுள்ளனர்.

எரித்திரிய மக்கள் இந்த விடுதலைப் போராட்டத்தில் பெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள். அதேவேளை பாரிய உயிரிழப்புக்களையும் பொருளிழப்புக்களையும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். எரித்திரிய விடுதலைப் போராட்டமானது கண்ணீராலும் இரத்தத்தாலும் எழுதப்பட்ட ஒரு வீர காவியமாகும். இப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேசிய விடுதலையையும் சோசலிசப் புரட்சியையும் இயக்கமாகக் கொண்ட இப்போராட்டத்தில் இறுதியாக எரித்திரிய மக்கள் வெற்றிவாகை சூடுவார்கள் என்பது திண்ணம். வீரம் செறிந்த இந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை இங்கு சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறோம்.




- எரித்திரிய விடுதலைப் போராட்டத்தில் இறந்த எரித்திரிய போராளிகள், பொதுமக்கள் தொகை **150,000** ஆகும்.
- **E.P.L.F.** போராளிகள் 1/3 பங்கினர் பெண் போராளிகளாவர்.
- **எரித்திரியாவின் 85 சதவீதமான பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக EPLF தெரிவித்துள்ளது.**
- **எரித்திரியப் போராளிகளின் சீருடை கட்டைக் காற்சட்டையும், மண்ணிற சட்டையுமாகும். இரப்பரினாலான பாதணியை அணிந்துள்ள இவர்கள் A.K. 47 கரிகுழல் துப்பாக்கிகளையே தமது ஆயுதமாக பாவிக்கின்றனர்.**

ஆபிரிக்காக் கண்டத்தின் வடகிழக்கு மூலையிலே அமைந்துள்ள எரித்திரியா கிழக்கு எல்லையாக, செங்கடலையும், வடக்கு, மேற்கு எல்லைகளாக சூடானையும், தெற்கு எல்லையாக எதியோப்பியாவையும் கொண்டிருக்கின்றது. கிழக்கு எல்லையாக உள்ள செங்கடல், இராணுவ, வர்த்தகரீதியாக கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 124,000 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்ட, கிட்டத்தட்ட இங்கிலாந்தின் அளவினையுடைய எரித்திரியாவின் மொத்த சனத்தொகை 35 இலட்சமாகும். அரபு-நீக்ரோ கலப்பினத்தை சேர்ந்த இம்மக்களின் மொத்தத் தொகையில் 50 சதவீதத்தவர் முஸ்லிம்களாவர். மிகுதி 50 சதவீதத்தவர் கிறிஸ்தவர்களாவர். எரித்திரியாவில் ஒன்பது மொழிகள் பேசப்படுகின்றபோதிலும், பிரதான மொழியாக ரைகிரே [TIGERE] என்னும் மொழியே பெரும்பாலானோரால் பேசப்படுகின்றது.

19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் எரித்திரியாவின் பல பகுதிகள் எகிப்திய, துருக்கிய நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழ் இருந்து வந்தன. இதை தொடர்ந்து 1889ம் ஆண்டு இத்தாலி எரித்திரியாவை தனது காலனித்துவ நாடாக்கியது. அன்றில் இருந்து 1941ம் ஆண்டு வரை அதாவது இரண்டாம் உலகயுத்தகாலம்வரை எரித்திரியா இத்தாலிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் கீழேயே இருந்து வந்தது. இந்த இடைப்பட்ட காலத்தில், எரித்திரியாவின் தென்புறத்தில் இருந்த எதியோப்பியாவோடு தொடர்புகளையும், ஒப்பந்தங்களையும் கொண்டிருந்த இத்தாலி 1936ல் எதியோப்பிய மன்னன் கெய்லி செலாசியின் ஆட்சியைக் கைப்பற்றி எதியோப்பியாவையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தது. எனினும் இரண்டாம் உலக யுத்தத்தின்போது இத்தாலிய சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்தது. எரித்திரியாவும், எதியோப்பியாவும், பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டபின், இவ்விரு நாடுகளின் ஆட்சிப் பொறுப்பும் பிரித்தானியா இராணுவ நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. முன்னர் எதியோப்பிய மன்னனாக இருந்த கெய்லி செலாசி பிரிட்டிஷாரால் மீண்டும் ஆட்சிபீடத்தில் அமர்த்தப்பட்டான்.

## எரித்திரிய - எதியோப்பிய இணைப்பு

எரித்திரியாவை ஒரு சமஷ்டி அரசு அமைப்பாக எதியோப்பியாவுடன் இணைக்க வேண்டும் என 1950-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டது. அமெரிக்காவும் வேறு பல நாடுகளும், இத்தீர்மானத்தை ஆதரித்தன. எனினும் ரஷ்யா இத்தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது டன், எரித்திரியா தனியான அரசாக இருப்பதற்கு அதற்கு பூரண சுதந்திரம் உண்டென்றும் வாதிட்டது. எனினும் எதிர்ப்புகளின் மத்தியில் இத்தீர்மானம் ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்டு எரித்திரியா எதியோப்பியாவுடன் சமஷ்டி அரசாக இணைக்கப்பட்டது. மேலும் கெய்லி செலாசி மன்னன் அமெரிக்க சார்பான, அமெரிக்கக் கைப்பொம்மையாகவே இருந்தான். இவனது ஆதரவுடன் 1952ல் எரித்திரியாவில், அமெரிக்க இராணுவ தகவல் நிலையமொன்று செங்கடலிலும், இந்து சமுத்திரத்திலும், எதிரிகளின் நடமாட்டத்தைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்டது. 1958ம் ஆண்டுவரை எரித்திரியாவில் எந்த ஒரு தேசிய விடுதலை இயக்கமும் உருவாகவில்லை. எரித்திரியப் பொதுமக்கள் மட்டும், ஆங்காங்கு, செலாசி மன்னனுக்கு எதிராக ஜனநாயகரீதியான போராட்டங்களை நடத்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## முதலாவது தேசிய விடுதலை இயக்கம்

1958ம் ஆண்டு எரித்திரிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கியமான ஆண்டாகும். இந்த ஆண்டிலேயே, வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்திருந்த எரித்திரியத் தலைவர்களால் எரித்திரிய மக்களின் முதலாவது தேசிய விடுதலை இயக்கமான எரித்திரிய விடுதலை முன்னணி [ERITREAN LIBERATION FRONT] என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு தமது விடுதலைக்கான புரட்சியைத் தோற்றுவித்து போராட்டத்தை, தீவிரமாக்க ஆயுதக்குழு ஒன்றை அமைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டது. 1961ல் இவர்களது முதல் இராணுவ நடவடிக்கையாக பொலிஸ்படை ஒன்றின் மீதும், இராணுவப் பாசறை ஒன்றின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து 1962ல் எதியோப்பிய மன்னன், எரித்திரியாவை சுயாட்சி அற்ற பிரதேசம் என அறிவித்ததுடன், அங்கிருந்த அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள், எல்லாவற்றையும் தடை செய்து எரித்திரியாவை எதியோப்பியாவின் 14வது மாகாணமாக இணைத்துக் கொண்டான். எதியோப்பியாவின் இந் நடவடிக்கையைத் தொடர்ந்து E.L.F. கெரில்லாக்களுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்தது. கெரில்லாக்களின் தொகையும் அதிகரித்தது. போராட்டம் தீவிரமாக்கப்பட்டது. E.L.F. அணி எரித்திரியாவை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து, ஐந்து இராணுவ தலைவர்களை நியமித்து போராட்டத்தை வலுப்படுத்தியது. ஆயினும் E.L.F. அமைப்பில் பல குறைபாடுகள் இருந்தன.

## ELF அணியின் குறைகள்

E.L.F. அணி தமக்கென்று ஒரு தெளிவான சித்தாந்தத்தைக் கொண்டிருக்கவில்லை. போராட்டத்தில், இன, மத, ரீதியாகவும், பல்வேறு பூர்வீகக் குடிகளாகவும் வேறுபட்டிருந்த எரித்திரிய மக்கள் எல்லோரையும் ஓரணியில் திரட்ட இவர்கள் முயற்சிக்கவில்லை. மாகாண அடிப்படையில் இயங்கி வந்த இவர்கள் போராட்டத்துக்கு தேவையான நிதியைப் பொதுமக்களிடம் இருந்து வரிகளை அறவிட்டும், பொதுச்சொத்துக்களை கொள்ளையடித்தும் பெற்றுக் கொண்டார்கள். அத்துடன் பொது மக்களின் ஆடு, மாடு, போன்ற பிராணிகளையும் திருடினார்கள்.

E.L.F. அணியின் இந்நடவடிக்கைகளால் பொதுமக்கள் மத்தியில் அவர்களின் செல்வாக்கு பெருமளவு குறைந்தது. போராட்டத்திலும் தேக்கநிலை ஏற்பட்டது. இதே நேரம் எதியோப்பியப் படைகள் 'கெரென்' என்ற இடத்தில் 500க்கு மேற்பட்ட அப்பாவி எரித்திரிய மக்களைப் படுகொலை செய்தன. இப்படுகொலையைத் தொடர்ந்து 1967ல் முதல் முதலாக பெருமளவிலான மக்கள் சூடானுக்குள் அகதிகளாகச் சென்றனர்.

## EPLFன் தோற்றம்

E.L.F.ன் நடவடிக்கைகளால், போராட்டம் பின்தள்ளப்படுவதை உணர்ந்த E.L.F. அமைப்புக்குள் இருந்த தெளிந்த சிந்தனையுள்ள, உண்மையான தேசிய விடுதலை நோக்கத்தை கொண்டிருந்த புரட்சிவாதிகள் E.L.F. அணியில் இருந்து வெளியேறி 1970ம் ஆண்டளவில், எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி [ERITREAN PEOPLE'S LIBERATION FRONT - E.P.L.F.] என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இவ்வமைப்பு சகல மக்களையும், எவ்வித வேறுபாடுமின்றி தேசிய ரீதியில் ஒன்றிணைத்துப் போராட்டத்தில் ஈடுபடுத்தியது. திட்டமிட்ட கட்டுப்பாடான நடவடிக்கைகளால், இராணுவ ரீதியாகவும், அரசியல்ரீதியாகவும், தன்னை வளர்த்துக் கொண்டதன் மூலம் இவ்வமைப்பு மக்கள் மத்தியில் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டது. இதே நேரம் மக்கள் செல்வாக்கை இழந்திருந்த E.L.F. அணியும் ஒரு தனித்த இராணுவக் குழுவாக இயங்கி வந்தது.

---

## THE HINDU

1983ம் ஆண்டில் 197.7 கோடி ரூபாய்களாக இருந்த ஸ்ரீலங்காவின் இராணுவச் செலவு 1984ல் 232.9 கோடி ரூபாய்களாகவும், 1985ல் 513.9 கோடி ரூபாய்களாகவும் திடீரென உயர்ச்சி அடைந்தது. இராணுவத் தீர்வொன்றைக் காணுவதற்கான இறுதிக் கட்ட முயற்சியில், கடந்த 18 மாதங்களாக ஏராளமான ஆயுதங்களை பல்வேறு நாடுகளிலிருந்து வாங்கியதுதான் உயர்வின் காரணம்.

கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கென சிங்கப்பூருக் கூடாக வாங்கப்பட்ட பீரங்கிகள் பொருத்தப்பட்ட 21 'பெல்' ஹெலிகொப்டர்களும் அவர்கள் கொள்வனவு செய்தவற்றுள் அடங்கும். இராணுவ நடவடிக்கைகளின் போது இக் ஹெலி கொப்டர்களில் சில பிரித்தானிய கூலிப்படையைச் சேர்ந்த விமான ஓட்டிகளால் செலுத்தப்படுகின்றன என்பதற்கு ஆதாரமாக இந்திய அரசு நம்பகரமான தகவல்களைப் பெற்றுள்ளது.

ஆகாய மார்க்க தாக்குதல்களை மேற்கொள்வதற்காக இத்தாலியில் உருவாக்கப்பட்ட சியா மார்செட்டி (Siai Marchetti) இராணுவ விமானங்கள் 12ஐ ஸ்ரீலங்கா வாங்கி உள்ளது. கண்காணிப்புப் பணிகளுக்காக 6 செஸ்னு 737 ஆகாய விமானங்களையும் அது பெற்றுள்ளது.

இக்கால எல்லையுள் இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து கிட்டத்தட்ட 150 துருப்புக் கவச வாகனங்களையும் (Armoured Personnel Carriers) ஸ்ரீலங்கா கொள்வனவு செய்துள்ளது. பெருமளவு மோட்டார்கள், இயந்திரத்துப்பாக்கிகள், அரைத் தானியங்கி கரி குழல் துப்பாக்கிகள் உட்பட 30000 என கணக்கிடப்படும் சிறுரக ஆயுதங்களில் ஒரு பகுதி சீனவிடமிருந்தும், பெரும் பகுதி பாகிஸ்தானிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு மேலே கூறியவற்றை விட இன்னும் சில 25 இராத்தல் குண்டுகளை வீசும் பீரங்கிகளையும், (25 Pounder artillery) 130 மி.மீ நடுத்தர பீரங்கிகளையும், ராக்கட் எறிகுண்டு செலுத்திகளையும் (RPG launchers) போதுமான வெடி பொருட்களையும் பெற்றுக் கொண்டது.

60 ரோந்துக்கப்பல்கள், பல அளவுகளில் கரையோரப் படகுகள் போன்றவற்றின் சேர்க்கையினால் கப்பற்படையானது பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதான ஆயுத விநியோகஸ்தராக மட்டும் இராது சிறிலங்கா இராணுவ வீரர்களுக்கு நவீன ஆயுதங்களைக் கையாள்வதிலும், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் பயிற்சி அளித்து வருகிறது. இவ்வாறு பாகிஸ்தானுடன் ஸ்ரீலங்காவுக்கு வளர்ந்து வரும் 'உறவானது' அமைதியைக் கெடுக்கும் விடயமாக உள்ளது.

## INDIA TODAY

இராணுவத் தீர்வொன்றைக் காணுவதற்கான முழு முயற்சியில் கொழும்பு தனது புலனைச் செலுத்தத் தீர்மானித்துவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், இதுவரைக்கும் தோல்வியில் முடிந்த இம்முயற்சியில் பாகிஸ்தானின் ஈடுபாடு அதிகரித்து வருவது இந்தியா தனது நிலைப்பாட்டைக் கடுமையாக்குவதற்குரிய பல காரணங்களில் ஒன்றாகும். பாதுகாப்பு, உளவுத் துறை வட்டாரங்களின் கூற்றுப்படி, கடந்த சில மாதங்களாக ஸ்ரீலங்காவின் ஆயுதக் கொள்வனவுக்குரிய முக்கிய மூல இடங்களாக விளங்குபவை பாகிஸ்தானும், அதனைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்கா, இஸ்ரேல் பிரிட்டன், சீனா, சிங்கப்பூர் ஆகியவையுமாகும். பாகிஸ்தானிடமிருந்து ஸ்ரீலங்கா 25 இராத்தல் குண்டுகளை வீசும் ஏராளமான நடுத்தர பீரங்கிகளையும் ராக்கட் எறிகுண்டுகளையும் பெற்றுள்ளது. அவைதவிர, கரிகுழல் துப்பாக்கிகள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள், மோட்டார்கள் போன்ற சிறுரக ஆயுதங்கள் 10000 யும் கொள்வனவு செய்துள்ளது. பாகிஸ்தான் அரசாங்கம் கொழும்புக்கு பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களை வழங்க உறுதி அளித்திருப்பதாக கடைசியாகக் கிடைத்த அறிக்கைகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் ஈடுபாடு, ஆயுத விநியோகத்தை மேவி மேலும் செல்கிறது. கடந்த ஒரு வருடத்தில், அதிகாரிகள், கீழ்நிலை அதிகாரிகள், வேறு தரத்திலுள்ளோர் ஆக 8000 பேர் அளவில் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றுத் திரும்பி உள்ளனர். அவர்கள் கிளர்ச்சி அடக்கும் முறை, பீரங்கி சுடுதல், கீழ்நிலைத் தளபதிகளுக்குரிய பயிற்சிகள், அடிப்படைப் பயிற்சிகள் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்றனர். அறிக்கைகள் கூறுவதைப் போன்று பாகிஸ்தான் ஸ்ரீலங்காவின் விமானப் படையைச் சேர்ந்த விமானிகளுக்கும் பயிற்சி அளிக்கிறது.

கினிமினிசேவிஸ் என்ற வேடிக்கையான பெயரை உடைய அமைப்பு, (பிரித்தானியாவின்) விசேஷ ஆகாய சேவையைச் (SAS) சேர்ந்த முன்னாள் போர்வீரர்களைக் கொண்டது. இவர்கள் முன்பு ஓமானில் கடமை ஆற்றியவர்கள். இவ்வமைப்பு ஸ்ரீலங்காவில் வைத்தே அதனது பாதுகாப்புப் படைகளுக்குப் பயிற்சி அளிக்கிறது. பிரித்தானிய அரசாங்கத்தின் மறைமுக அனுமதி இன்றி வெளிநாடுகளில் இவ்வமைப்பைச் சோர்ந்தவர்கள் செயல்படுவதில்லை.



## வெளிநாட்டு உதவி

எரித்திரியா மக்களுக்குரிய சுதந்திரத் தாயகம் எரித்திரியாதான் என்று 1950 ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் சபையிலே குரல் கொடுத்த சோவியத் யூனியன், எரித்திரியாவில் போராட்ட அணிகள் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து, எரித்திரியக் கெரில்லர்க்களுக்கு பெருமளவில் இராணுவ தளபாடங்களையும், இராணுவப்பயிற்சிகளையும் வழங்கி வந்தது. மேலும் இதற்கு சார்பாக கியூபாவும், எரித்திரிய கெரில்லாக்களுக்கு இராணுவ பயிற்சி வழங்கியது. எதியோப்பிய ஆட்சி அமெரிக்காவுக்கு சார்பாக இருந்தபடியால் அப்பிரதேசத்தில் எரித்திரியா மூலம் தனது செல்வாக்கை நிலைநாட்ட ரஷ்யா முயன்றது.

## எதியோப்பிய ஆட்சி மாற்றம்

இதே நேரம் 1974ம் ஆண்டு எதியோப்பியாவில் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடத் தொடங்கியதையடுத்து அமெரிக்காவின் கைப்பொம்மையான மன்னர் செலாசியின் ஆட்சி உயர்மட்ட இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டு, மார்க்சிச சிந்தனையாளராகிய 'மென்கெஸ்ட்ரோ' ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார். இதைத் தொடர்ந்து எதியோப்பியாவில் பல மாற்றங்கள் உண்டாகின. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன, நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அமெரிக்க முகவர்கள் (agents) எதியோப்பியாவில் இருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர். சோசலிசப் பாதைக்கான மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும் எதியோப்பிய புதிய அதிபர் எரித்திரிய மக்களின் சுயநிர்ணய உரிமையையோ, தேசிய விடுதலைப் போராட்டத்தையோ அங்கீகரிக்கவில்லை. இவரும் எரித்திரிய கெரில்லாக்களை அடக்குவதையே கொள்கையாகக் கொண்டிருந்தார். இக்கால கட்டத்தில் எரித்திரியக் கெரில்லாக்களுக்கு ஆயுத உதவி வழங்கி வந்த சோவியத் யூனியன் எதியோப்பியாவில் தனக்கு சார்பான அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து ஒரு இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டி வந்தது. எதியோப்பியாவை ஆதரிப்பதா, அல்லது எரித்திரியக் கெரில்லாக்களை ஆதரிப்பதா என்ற ஒரு சங்கடமான நிலை உருவானது.

## எல்லை யுத்தம்

இச்சந்தர்ப்பத்தில், சோமாலியா, எதியோப்பியா இரண்டையும் பிரிக்கும் எல்லைப் பிரதேசத்தில், எதியோப்பியாவின் பகுதியில் அமைந்திருந்த ஒகடா [OGADAH ] பாலைவனப் பிரதேசத்துக்காக இருநாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு தமது இராணுவ பலத்தை அதிகரித்தன. 1960ம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற சோமாலியா ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்க சார்பு நாடாக இருந்தது. இது எதியோப்பியாவுடனான சண்டையில் ஈடுபடுவதற்காக 20,000 பேர் கொண்ட இராணுவ அமைப்பொன்றை உருவாக்கித் தருமாறு அமெரிக்காவிடம் வேண்டியது. எதியோப்பியாவில் அமெரிக்க கைப்பொம்மை ஆட்சி கவிழ்க்கப்பட்டிருந்தமையாலும், எதியோப்பிய தலைமைப்பீடம் ரஷ்யா சார்பாக மாறிக் கொண்டிருந்தாலும் அமெரிக்கா சோமாலியாவுக்கு உதவி புரிய முன்வந்தது. எனினும் எதியோப்பியாவை முற்றாக முறித்துக் கொள்ள விரும்பாத அமெரிக்க நிர்வாகம் 5000 பேரை மட்டும் கொண்ட ஓர் இராணுவத்தை சோமாலியாவுக்கு அமைத்துக்கொடுத்தது. இந்நடவடிக்கையால் ஆத்திரமுற்ற எதியோப்பிய தலைமைப்பீடம், எதியோப்பியாவில் இருந்த அமெரிக்க தளங்களை அகற்றியதோடு ரஷ்யாவின் உதவியைக் கோரியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட ரஷ்யா உடனடியாக எதியோப்பியாவுக்கு 100 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் அனுப்பியது. இதைத்தொடர்ந்து சோமாலியாவுக்கும், எதியோப்பியாவுக்கு மிடையே போர் ஏற்பட்டது. இப்போர் சோவியத், அமெரிக்க வல்லரசுகளுக் கிடையேயான ஒரு குட்டி யுத்தம் என வர்ணிக்கப்பட்டது.

## எரித்திரிய மக்களின் வெற்றி

கொள்கை முதல் பல்வேறு நடவடிக்கைகளிலும் தம்மிடையே வேறுபாடுகளைக் கொண்டிருந்த E.P.L.F. அணியும், E.L.F. அணியும் தேசிய விடுதலைப் போருக்காக தம்மிடையே சில ஒப்பந்தங்களை உண்டாக்கிப் போரிட்டு வந்தன. இவ்வணிகள் 1976, 77 காலகட்டப் பகுதியில் சோமாலியாவுக்கும், எதியோப்பியாவுக்குமிடையே நடந்த சண்டையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டன. எரித்திரியப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த எதியோப்பிய படைகள் மீது பலத்த தாக்குதல்களை இவ்வணிகள் மேற்கொண்டன. சோமாலியாவுடன் தீவிரமான போரில் ஈடுபட்டிருந்த எதியோப்பியா, எரித்திரியாவுடனான போரை முக்கியத்துவப்படுத்தவில்லை. எரித்திரிய தலைநகரான அஸ்மராவை தவிர ஏனைய எரித்திரியப் பிரதேசங்களை விடுவித்துக் கொண்ட EPLF, ELF அணியினர் 1977ம் ஆண்டின் இறுதியில் எரித்திரியா முழுவதையும் தமதாக்கிக் கொண்டனர். இவர்களின் இந்நடவடிக்கைக்கு எகிப்து, ஈராக், சூடான் ஆகிய நாடுகளும் உதவியமை குறிப்பிடத்தக்கது.

## எதியோப்பியாவின் பெரும் படையெடுப்பு


சோமாலிய - எதியோப்பிய போரில் சோமாலியா தோற்கடிக்கப்பட்டு, ஒகடா பாலைவனப்பிரதேசம், எதியோப்பிய வசமாகியது. இதனையடுத்து சோமாலிய - எதியோப்பிய போர் முடிவுக்கு வந்ததும், எதியோப்பியாவின் கவனம் எரித்திரியா மீது திரும்பியது. எதியோப்பியா பெருமளவு இராணுவத்தை திரட்டிக் கொண்டு எரித்திரியா மீது தாக்குதலை மேற்கொள்ளத் தயாரானது. இதுவரை காலமும் எரித்திரிய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரித்துவந்த சோவியத் யூனியன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. எதியோப்பிய மார்க்சிய அரசுடன் எரித்திரியா ஒரு சமஷ்டி அமைப்பாக இணையவேண்டுமென்பதே ரஷ்யாவின் புதிய நிலைப்பாடாயிற்று. இதனால் எரித்திரிய போராளிகளுக்கான உதவியை நிறுத்தியதுடன் எதியோப்பியா எரித்திரியா மீது மேற்கொண்ட போரிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. 1978 ஜுலை மாதம் எதியோப்பியாவின் 1 இலட்சம் துருப்புகளும், 4000 கியூப துருப்புகளும், 250 ரஷிய இராணுவ நிபுணர்களும் கொண்ட அணி எரித்திரியாவைத் தாக்கியது. தமக்கு ஆதரவளித்த சோவியத் யூனியனே தமக்கு எதிரான போரில் ஈடுபட்டதால் கலங்கிப்போன எரித்திரிய கெரில்லாக்கள் எரித்திரியாவை விட்டு சூடானுக்குள் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தாக்குதலின்போது பெருமளவு எரித்திரிய கெரில்லாக்களும், ஏராளமான பொதுமக்களும் கொல்லப்பட்டனர். $3^1/_2$ இலட்சத்துக்கு மேற்பட்டோர், அகதிகளாக சூடானுக்குள் செல்ல வேண்டி ஏற்பட்டது. சில மலைப் பிரதேசங்களைத் தவிர எரித்திரியா மீண்டும் எதியோப்பியாவின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

## மீண்டும் போராட்டம்

எரித்திரியாவில் இருந்து பின்வாங்கிய E.P.L.F. இயக்கத்தினர், சூடானின் கரையோரப் பிரதேசங்களில், தமது தளங்களை அமைத்து, போராட்டத்தை தொடர்ந்தனர். சூடானில் தளம் அமைத்துப் போராடும் E.P.L.F. கெரில்லாக்களை சமாளிக்க முடியாமல் திணறிய எதியோப்பியா 1980ல் சூடானுடன் ஓர் ஒப்பந்தத்தைக் கைச் சாத்திட்டதன் மூலம், சூடான் கரையோரப் பிரதேசங்களில் இருந்த E.P.L.F. கெரில்லாத் தளங்களை அகற்றியது. மேலும் 1979-1982 காலப் பகுதியில் எரித்திரியக் கெரில்லாக்களை முற்றாக அழிக்கும் நோக்குடன் 5 மிகப் பெரிய தாக்குதல்கள் எதியோப்பியாவால் நடத்தப்பட்டன. இந்நடவடிக்கைகள் எரித்திரிய கெரில்லாக்களை மிகவும் பாதிப்படையச் செய்தன.

*எதியோப்பிய விமானங்களின் குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்காக எரித்திரிய மக்கள் தரைக்கடியில் வீடமைத்து வாழ்கிறார்கள்.*







## பஞ்சமும் தேக்க நிலையும்

சோவியத்யூனியனின் புதிய நிலைப்பாடும் எரித்திரியக் கெரில்லாக்களின் இராணுவத் தோல்விகளும் E.P.L.F., E.L.F. இயக்கங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவித்தது. E.L.F. அமைப்பு ரஷ்ய ஆலோசனைப்படி நடக்க முடிவு செய்து, ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதில் ஈடுபட்டது. ஆனால் E.P.L.F. அணியோ, பேச்சுவார்த்தையை நிராகரித்தது. இச்சிக்கல் தொடர்பாக 1980ல் E.P.L.F., E.L.F. அணிகளுக்கு இடையே ஓர் உள்நாட்டுச் சண்டையே உருவானது. இக்கால கட்டத்தில் E.P.L.F. அணியில் 30,000 அங்கத்தவர்களும், E.L.F. அணியில், 5,000 அங்கத்தவர்களும் இருந்தனர். எனினும் 1981ல் இவ்விரு அணிகளும் மீண்டும் இணைந்து கொண்டன. இக்கால கட்டத்தில், எரித்திரியா, சூடான் பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. இதன்போது எரித்திரிய மக்களுக்கு, பல வெளிநாடுகள் உதவ முன்வந்தபோதும், எதியோப்பியாவால் அவை தடுத்து நிறுத்தப்பட்டன. 1982ல் மீண்டும், E.P.L.F. அணி, தனது இராணுவப் பணிகளை ஆரம்பித்தது. விரைவில் எரித்திரியாவின், மேற்குப்பகுதிகளையும், எரித்திரியாவின் செங்கடலின் கரையோரப் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இந்த அணி 1984ல் ஏற்பட்ட பஞ்சத்தால் போராட்டத்தில் தேக்க நிலையை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

## தொடர்ந்து போராட்டம்

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் விவசாய, கைத்தொழில், துறைகளை அபிவிருத்தி செய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளையும் கவனித்து வருகின்றனர். சுகாதாரம், கல்வி வசதி என்பனவும் இவர்களால் ஒழுங்கான முறையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் E.P.L.F. அணியினர் கெரில்லா நடவடிக்கைகள் மூலம் எதியோப்பிய அரசுக்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்தி வருவதுடன், எதியோப்பிய பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர். அடிமைகளாக வாழவிரும்பாது, ஒரு தேசிய இனமாக, சுதந்திரமாக வாழ்வதற்காக, 25 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் எரித்திரிய மக்கள் நிச்சயம் ஒரு நாள் தமது இலக்கை அடைந்தே தீருவார்கள்.

---

### SUNDAY

30-3-86

ஸ்ரீலங்காவில் தமிழருக்கெதிரான முனைப்பான படுகொலைத் தாக்குதலை, அண்மையில் இடம் பெற்ற தமிழ்ப் பொதுமக்களின் குடியிருப்புகள் மீதான ஆகாய விமானக் குண்டு வீச்சு வெட்ட வெளிச்சமாக்கியது. இதற்கெதிரான சர்வதேச அழுத்தத்தைத் திரட்டும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான நேரம் இந்தியாவுக்கு வந்துவிட்டது.

### The Telegraph

20.03.86.


இலங்கை அரச நிர்வாகம் தமிழர் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு மாகாணத்தில் விமானத்தாக்குதல்களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து இலங்கை இனப்பிரச்னை அதன் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தற்பாதுகாப்பற்ற பொதுமக்கள்மீதான இத்தாக்குதல் ஜெயவர்த்தன இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வுதான் பரிகாரம் என்று கூறிவருவது பயமுறுத்தல் அல்ல, உண்மையான ஒன்றுதான் என்பதை நிரூபித்துள்ளது. உண்மையில் அவர் இராணுவத்தீர்வினையே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்

யாழ்ப்பாண மாவட்டத்தில், 3 வார காலத்துள் மூன்று முறை குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. முதன்முறையாக பெப்ரவரி மாதம் 19ம் திகதி யாழ் மாவட்டத்திலுள்ள கொக்குவில், இணுவில், மானிப்பாய் ஆகிய கிராமங்கள்மீது குண்டுகள் வீசப்பட்டன. 26, 27ம் திகதி நள்ளிரவில் தாவடி, சுதுமலை, மானிப்பாய் ஆகிய கிராமங்கள்மீது மீண்டும் அரசு விமானத்தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் தமிழ்ப் பகுதிகளின் மீது தனது கட்டுப்பாட்டை அது இழந்துவிட்டது என்பதை மெய்ப்பித்துள்ளது.

போராளிகளின் தாக்கிவிட்டு ஓடும் போர்த்தந்திரம் அடிக்கடி நிகழ்கின்ற ஒரு சம்பவமாகிவிட்டதுடன், இது ஒரு நீண்ட நேர மோதல் என்ற வடிவத்தையும் பெற்றுள்ளது. இராணுவவண்டித் தொடர்கள் நிலக்கண்ணிகளால் அழிக்கப்படுகின்றன.

இந்நடவடிக்கைகள் இராணுவத்தினர் தமது பாசறையிம் பரப்புக்குள்ளேயே இருந்து சண்டையிட வேண்டிய ஆபத்தான நிலையை உருவாக்கியுள்ளது. அதாவது 10-15 மைல்கள் தூரத்துக்கு செல்லக்கூடிய பீரங்கிக் குண்டுகள் போன்ற நீண்ட தூரவீச்சினைக் கொண்ட ஆயுதங்களைக் கையாள வேண்டிய நிலைக்கு இராணுவத்தினர் தள்ளப்பட்டுள்ளனர். போராளிகள் தரைப் பிரதேசத்தின் நடவடிக்கைகளை தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதால் இராணுவத்தினர் விமானத்தாக்குதலுக்காக விமானங்களை உபயோகிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

தாழ்வாகப்பறக்கின்ற, இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களை சுட்டு வீழ்த்துவதற்கு போராளிகள் பொதுப்பயன்பாட்டு இயந்திரத்துப்பாக்கிகள் போன்றவற்றைப் பாவிக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள், ஆகாய விமானக் குண்டு வீச்சுகள் நிச்சயம் என முன் கூட்டியே கணித்துக் கொண்டவர்களாக காணப்பட்டனர். கிட்டத்தட்ட 7 மாதங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் தமிழீழப் பொதுமக்கள் எவ்வாறு விமானத்தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி அவர்களுக்கு விளங்கப்படுத்த ஓர் புத்தகம் வெளியிட வேண்டுமென்று தன்னுடைய ஆராய்ச்சிப் பிரிவுக்கு அறிவுறுத்தினார். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆராய்ச்சிப் பிரிவு உடனடியாக தமது இராணுவ நூல் நிலையத்தில் இருந்த பல்வேறு புத்தகங்களின் உதவியுடன் குண்டுத்தாக்குதலில் இருந்து பொதுமக்கள் எவ்வாறு சுய பாதுகாப்பை மேற்கொள்வது என்ற முறைகளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டனர். ''குண்டு வீச்சில் இருந்து பாதுகாப்பு'' என்ற இப்புத்தகத்தின் 60,000 பிரதிகள் மக்களுக்கு தாக்குதலுக்கு மூன்று வாரங்களுக்கு முன்னதாகவே வெளியிடப்பட்டது.



R.K. லட்சுமண். நன்றி

### தினமணி

தலையங்கம் 30-3-86

பாக் ஜலசந்தி வழியாக போராளிகளையும் தளவாடங்களையும் தமிழ்ப் போராளிகள் கொண்டுவருவதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டி, அந்த நடவடிக்கையை நிறுத்தினால் ஏப்ரல் 14ம்திகதி (புத்தாண்டு தினம்) வரை விமானத் தாக்குதல் நிறுத்துவதை நீடிப்பதாக மார்ச் 15ம் திகதி இலங்கையரசு அறிவித்தது. அப்பாவித் தமிழர்கள்மீது விமானத்திலிருந்து பீரங்கியால் சுட்டு, குண்டு வீசுவதற்கும் போராளிகள் ''வருவதற்கும்'' என்ன தொடர்பு இருக்கின்றது என்பது தெரியவில்லை ''போராளிகள் வந்தால்'' அப்பாவித் தமிழர்களை கொல்வோம் என்று இலங்கை அரசு வாதிப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது

இந்தியா தன் மத்தியஸ்த முயற்சிகளை நீடிக்க வேண்டுமென்று இலங்கை கோருகின்றது. இதெல்லாம் பேச்சுவார்த்தையில் அந்தரங்க சுத்தியுடன் நம்பிக்கை கொண்ட முயற்சியல்ல என்பது தெளிவாகி விட்டதால், இலங்கையரசின் வலையில் விழ இந்திய அரசு தயாராக இல்லை. பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாக இலங்கை பாசாங்கு காட்டுகிறதே தவிர உண்மையில் அத்தகைய எண்ணம் அதற்கு இருப்பதாக அதன் நடவடிக்கையிலிருந்து புலப்படவில்லை.




விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்
தால் வெளியிடப்பட்ட சுவரொட்டி.

